Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JUNE 08, 2023

வியாழக்கிழமை ஜூன் 08, 2023 | ஒளி: 09 கதிர்: 014 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு | FREE



டுபாயில் இருந்து வந்த

## தாய்க்கும் மகளுக்கும் குரங்கு அம்மை தொற்று

குரங்கு அம்மை வைரஸால் பாதிக்கப்பட்ட இருவர் நாட்டில் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

டுபாயிலிருந்து நாட்டிற்கு வந்த 25 வயதுடைய பெண் மற்றும் அவருக்குப் புதிதாகப் பிறந்த மகளுக்கு வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டு, சிகிச்சைக்காக ஐடிஎச் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் குரங்குக் காய்ச்சலில் இருந்து அந்த பெண்ணின் கணவர் குணமடைந்துள்ளதாகவும் பின்னர், மகளுக்கும் தாய்க்கும் வைரஸ் தொற்றியுள்ளதாகவும் வைத்தியர் தெரிவித்தார்.

காய்ச்சல் அறிகுறிகளுக்கு சிகிச்சை பெறுவதற்காக இருவரும் கொழும்பில் உள்ள தனியார் வைத்திய சாலைக்குச் சென்ற பின்னர் இரண்டு பேரும் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

# கொழும்பில் கைது; கிளியில் பிணை

யாழ். மருதங்கேணி பகுதியில் இடம்பெற்ற கூட்டமொன்றின் போது பொலிஸ் புலனாய்வாளர்களுடன் இடம்பெற்ற சம்பவம் குறித்து, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், புதன்கிழமை (07) கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சியிலிருந்து வருகை தந்த விசேட பொலிஸ் குழுவினரால் கொள்ளுப்பிட்டியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினரின் இல்லத்தில் வைத்தே அவர் கைது செய்யப்பட்டார். கடந்த 2ஆம் திகதி, யாழ். மருதங்கேணி பகுதியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளார்.



இடம்பெற்ற கூட்டமொன்றின் போது பொலிஸாருடன்

இதேவேளை, மருதங்கேணி பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றில் சமர்பித்த விண்ணப்பத்துக்கு அமைய கஜேந்திரகுமார் எம்.பிக்கு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றம், செவ்வாய்க்கிழமை (06) வெளிநாட்டு பயணத்தடை விதித்து உத்தரவு பிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் புதன்கிழமை (07) மாலை 5.30 மணியளவில் ஆஜர்படுத்தப்பட்டார்.

## கஜேந்திரகுமார் சாந்தமானவர்



கஜேந்திரகுமார் எம்.பிக்கு பொலிஸ் பாதுகாப்போ மெய்ப்பாதுகாவலர்களோ இல்லை என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன் என்றும் தனது சாரதியுடனேயே அவர் அனைத்து பிரதேசங்களுக்கும் செல்கிறார் என்றும் மிகவும் அமைதியான ஒருவர் என்றும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## அமர்வுக்கு வருகையில் கைது செய்ய முடியாது

### சபாநாயகருக்கு சுட்டிக்காட்டினார் சஜித்



பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இந்தச் சபைக்கு வருவதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது என்றும் பாராளுமன்ற சபை அமர்வுக்கு வரும்போது அவரை கைதுசெய்ய முடியாது என்றும் எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, சபாநாயகருக்கு சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

# கஜேந்திரனின் கைதால் சபையில் சொற்போர்

### கூட்டமைப்பு எம்.பிக்களும் அமைச்சர்களும் பரஸ்பரம் குற்றச்சாட்டு

### அரச தரப்பினர் புலிக் கூச்சலிட்டனர்

கஜேந்திரகுமார் எம்.பி கைது செய்யப்பட்டமை குறித்து கூட்டமைப்பு எம்.பிக்கள் பொலிஸாரை குற்றம் சாட்டிய நிலையில், அமைச்சர்கள் இருவர், பொலிஸாரை எம்.பி தாக்கியதாக பரஸ்பரம் குற்றம் சுமத்தியதால் சபையில் சொற்போர் வெடித்தது.

இதனையடுத்து சபையில் அரச தரப்பினர் “புலி” “புலி” எனக் கூச்சலிட்டதுடன், பதிலுக்கு சாணக்கியன், ஸ்ரீதரன் எம்.பி.க்களும் கூச்சலிட்டனர். பாராளுமன்றத்தில் புதன்கிழமை (07) சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் உட்பட இலங்கையின் கைத்தொழில் துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி யான இரா. சாணக்கியன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை தொடர்பில் கடும் கண்டனத்தையும் எதிர்ப்பையும் வெளியிட்டார்.



தொடர்ச்சி P2

கஜேந்திரகுமார் எம்.பி கைது

## பொலிஸாரின் கடமையில் எம்மால் தலையிட முடியாது



காலையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி, பிரதிபொலிஸ்மா அதிபர் ஆகியோர் தன்னுடன் உரையாடியதாகவும் பொலிஸாரின் கடமையில் எமக்கு தலையிட முடியாது என்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

கஜேந்திரகுமார் எம்.பி கைது செய்யப்பட்டமை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி.

தொடர்ச்சி P2

# இலங்கை மத்திய வங்கியே நெருக்கடி ஏற்படுத்தியது

தாங்கள் ஒப்படைக்கும் போது இருந்த அந்நிய செலாவணி கையிருப்பை பூச்சியம் வரையில் குறைத்துள்ளனர் என்றும் அந்நிய செலவணி கையிருப்பை பயன்படுத்தி கடனை மீளச் செலுத்த இலங்கை மத்திய வங்கி எடுத்த தீர்மானமே நெருக்கடிக்கு காரணம் என்றும் எதிர்க்கட்சி பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (07) நடைபெற்ற கைத்தொழில் துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை, பிரேரணை மீதான விவாதத்தின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசாங்கத்தினர் கடந்த வருடத்தில் இருந்த நிலைமையையும் இந்த வருடத்தில் உள்ள நிலைமையையும் ஒப்பிட்டு பார்க்குமாறு கூறுகின்றனர்.




தொடர்ச்சி P2



## மக்களை ஏமாற்ற வேண்டாம்; மதிய உணவை வழங்குங்கள்

### கல்வி அமைச்சரிடம் சஜித் கோரிக்கை

43 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்காதது பெரும் பிரச்சினையாக மாறியுள்ளதாகவும், இது பிள்ளைகளின் மூளை வளர்ச்சி உட்பட பல உடல்நலப் பிரச்சினைகளையும் பாதிப்பதாகவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பொய்யான தகவல்களை கூறி மக்களை ஏமாற்ற வேண்டாம் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ஜூன் 15 முதல் ஒன்லைனில் கடவுச்சீட்டு விண்ணப்பிக்கலாம்


எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் கடவுச்சீட்டுகளை ஒன்லைனில் விண்ணப்பித்து, வீடுகளுக்கே அவற்றை பெற்றுக்கொள்ளும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த முறையின் கீழ், கடவுச்சீட்டுகளை மூன்று நாள்களுக்குள் வீடுகளுக்கு அனுப்பப்படும் என்றும் கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்கான பணத்தையும் ஒன்லைன் மூலமே செலுத்த முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைவிரல் அடையாளத்தை அருகிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட பிரதேச செயலகங்களில் வழங்க முடியுமெனவும் திணைக்களம் அறிவித்துள்ளது.




## நெடுந்தீவு படகு விபத்து; 38 பேர் பத்திரமாக மீட்பு



நெடுந்தீவுக்குள் நுழையும் இறங்குதுறைக்கு அண்மையில் திங்கட்கிழமை (07) விபத்துக்குள்ளான படகில் பயணித்த 38 பேரையும் காப்பாற்றிய கடற்படையினர், உடமைகளையும் பத்திரமாக மீட்டுள்ளனர். யாழ்ப்பாணம், புங்குடுதீவில் உள்ள குறிக்கட்டுவான் இறங்குத்துறையில் இருந்து நெடுந்தீவு வரையிலும் இந்த ட்ரோலர் பயணித்துள்ளது.

தொடர்ச்சி P2

## மத விவகாரம் மூவருக்கும் 21 வரை விளக்கமறியல்

பௌத்தத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நகைச்சுவை நடிகர் நடாஷா எதிரிசூரிய மற்றும் அந்தக் கருத்தை பகிர்ந்தார் என்று குற்றம் சாட்டப்பட்ட சமூக ஊடக செயற்பாட்டாளர் புருனோ திவாகர ஆகியோரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் திலின கமகே, புதன்கிழமை (07) உத்தரவிட்டுள்ளார்.

மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் கருத்துகளை வெளியிட்ட இராஜாங்கனை சத்தாரதன தேரரை எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் திலின கமகே உத்தரவிட்டார்.



தொடர்ச்சி P2

அடகு வைக்கும் சொத்துகளை

## பினாமிகள் மூலம் சுருட்டும் வங்கி அதிகாரிகள்

சில வங்கிகளில் அதிகாரிகள் மிகவும் மோசடியானவர்கள் என்றும் வேண்டுமென்றே கொடுக்கல் வாங்கல்காரர்களை ஏமாற்றி, சூழ்ச்சியான வகையில் அந்தச் சொத்துகளை தங்களின் ஆட்களையே அனுப்பி அவற்றை விற்கும் செயற்பாடுகள் நடக்கின்றன என்றும் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (07) நடைபெற்ற கைத்தொழில் துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டின் அடகு சட்டத்தின் கீழ் சொத்துகளை வங்கி, நிதி நிறுவனத்தில் அடகு வைத்த பின்னர் அடகு பணத்தை மீளச் செலுத்த முடியாது போனால் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும்.



தொடர்ச்சி P2

சிறு, நடுத்தர தொழிற்றுறையினரின்

## சொத்துகளை அரசுடமை ஆக்குவது முறையற்றது

### 2 மாதங்களில் 4 ஆயிரம் சொத்துகள் அரசுடமை என்கிறார் ஹர்ஷ



பல பில்லியன் ரூபாய் வங்கி கடன்களை பெற்றுக் கொண்டுள்ள அரசியல்வாதிகள் உரிய காலத்தில் நிலுவை தொகை செலுத்தாமல் உள்ள நிலையில், பொருளாதார பாதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள சிறு மற்றும் நடுத்தர தொழிற்றுறையினரின் சொத்துகளை அரசுடமையாக்குவது முறையற்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் பெப்ரவரி மாதம் வரையான காலப்பகுதியில் மாத்திரம் தொழில் துறையினரின் 4 ஆயிரம் அசையும் மற்றும் அசையா சொத்துகள் அரசுடமையாக்கப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (07) இடம்பெற்ற இலங்கையின் கைத்தொழில் துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணையை முன்வைத்து உரையாற்றும்போது மேலும் தெரிவித்த அவர்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கஜேந்திரகுமார் சாந்தமானவர்

கஜேந்திரகுமார் எம்.பி கைது செய்யப்பட்டமை தொடர்பில் சபையில் சஜித் பிரேமதாஸ விசேட கூற்றை முன்வத்ததைத்தொடர்ந்து கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கஜேந்திரகுமார் எம்.பி, என்னையும் தொடர்புகொண்டார். பாராளுமன்றத்துக்கு வந்து சிறப்புரிமையை முன்வைத்த பின்னர் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என நான் அவருக்கு தெரிவித்தேன்.

அத்துடன் கஜேந்திரகுமார் எம்,பிக்கு பொலிஸ் பாதுகாப்போ மெய்ப்பாதுகாவலர்களோ இல்லை என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். இங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 5,10 பாதுகாப்பு அதிகாரிகள் இருக்கின்றனர். ஆனால் வடக்கு பாராளுமன்ற உறுப்பினராக இருந்தும் அவருக்கும் எந்தப் பொலிஸ் பாதுகாப்பும் இல்லை. தனது சாரதியுடனேயே அவர் அனைத்து பிரதேசங்களுக்கும் செல்கிறார். மிகவும் அமைதியான ஒருவர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்துக்கு வரும்போதும் பாராளுமன்றத்தில் இருந்து செல்லும்போது பொலிஸாரால் கைதுசெய்ய முடியாது. அப்படிக்கைது செய்ய சபாநாயகர் அனுமதிக்கவும் கூடாது என்றார்.

# அமர்வுக்கு வருகையில் கைது செய்ய முடியாது

### சபாநாயகருக்கு சுட்டிக்காட்டினார் சஜித்

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (07) விசேட கூற்றை முனவைத்த எதிர்க்கட்சித் தலைவர்,

“பாராளுமன்ற சிறப்புரிமைகளின் கீழ் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பிக்கு பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்ள உரிமை இருக்கிறது. பாராளுமன்ற அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் சட்டத்தின் 5ஆம் உறுப்புரையில் அந்த உரிமை இருக்கிறது.

அத்துடன் வடக்கில் கஜேந்திரகுமாருக்கு ஏற்பட்ட சம்பவம் தொடர்பாக, சிறப்புரிமை மீறப்பட்டபட்டமை தொடர்பாக பாராளுமன்றத்துக்கு வந்து உரையாற்ற உரிமை இருக்கிறது. அதேநேரம், சபைக்கு வந்து, சிறப்புரிமை பிரச்சினையை முன்வைத்த பின்னர் பொலிஸ் நிலையத்துக்கு சென்று வாக்குமூலம் வழங்குவதாக அவர் பொலிஸாருக்கும் தெரிவித்திருக்கிறார்; சபாநாயகராக உங்களுக்கும் தொலைபேசியில் அழைத்து தெரிவித்திருக்கிறார்.

எம்.பி ஒருவரை கைதுசெய்யும்போது பின்பற்றவேண்டிய நடைமுறைகள் தொடர்பில் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ 2015 மார்ச் மாதம் 3ஆம் திகதி வழங்கிய மிகவும் தெளிவான தீர்ப்பொன்று இருக்கிறது. அதை நினைவூட்டுகின்றேன்.

கஜேந்திரகுமார் எம்.பியின் அரசியல் தொடர்பாகவும் அவரின் கொள்கை தொடர்பாகவும் எங்களுக்கு மாறுபட்ட கருத்துகள் இருக்கின்றன. என்றாலும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இந்தச் சபைக்கு வருவதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது.

பாராளுமன்ற சபை அமர்வுக்கு வரும்போது அவரை கைதுசெய்ய முடியாது. அதனால் சபாநாயகராகிய நீங்கள், உடனடியாக சட்டப்பிரிவுகளுக்கு ஆலோனை வழங்கி, பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்” என்றார்.

# பொலிஸாரின் கடமையில் எம்மால் தலையிட முடியாது

ஆகியோர் சபையில், புதன்கிழமை (07) முன் வைத்த குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“சம்பவம் இடம்பெற்ற முதல் சந்தர்ப்பத்திலேயே அது தொடர்பில் பொலிஸ் அதிகாரிகள் எனக்கு அறிவுறுத்தினார்கள். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை கைது செய்ய நீதிமன்றத்துக்கு அறிவித்து நடவடிக்கை எடுப்பதாகவும் எனக்கு தெரிவித்தார்கள். அவர் பாராளுமன்றத்துக்கு வருவதை தடுப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை என்று நான் அவர்களுக்கு தெரிவித்தேன்.

காலையில் என்னுடன் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி, பிரதி பொலிஸ்மா அதிபர் ஆகியோரும் உரையாடினர். கைது செய்யப்பட்ட கஜேந்திரகுமார் எம்.பியை கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்திய பின்னர், பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர்” என்றார்.

# கஜேந்திரனின் கைதால் சபையில் சொற்போர்

யாழ்ப்பாணத்தில் கஜேந்திரகுமார் எம்.பி பங்கேற்ற கூட்டமொன்றுக்கு புலனாய்வுத்துறையினர் சென்று அச்சுறுத்தியுள்ளனர். அவர்கள் சீருடை அணியவும் இல்லை. தம்மை யார் என்று நிரூபிக்கும் அடையாள அட்டையையும் வைத்திருக்கவில்லை. அவர்களிடம் நீங்கள் யார், உங்கள் அடையாளத்தை நிரூபியுங்கள் என கஜேந்திரகுமார் எம்.பி கேட்டது என்ன கொலைக்குற்றமா ?

சிவிலுடையில் தமது அடையாளங்களை நிரூபிக்காது சி.ஐ.டி. ரி.ஐ.டி. என ஒவ்வொரு பெயர்களைக் கூறிக்கொண்டு வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் வீடுகளுக்குள் புகுந்து அடாவடி செய்வது தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கே இந்த நிலைமை என்றால் சாதாரண மக்களைப்பற்றி சிந்தித்துப்பாருங்கள். இன்று தமிழ் எம்.பிக்களுக்கு நடப்பது நாளை இங்குள்ள எம்.பிக்களுக்கும் நடக்கும் என்பதனை மறந்து விடாதீர்கள் என்று சாணக்கியன் எம்.பி மிகவும் ஆவேசமாக பேசிக்கொண்டிருந்தார்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண, “சாணக்கியன் எம். பி. இனவாத ரீதியில் பேசுகின்றார். அவர் விவாத்திற்கான நேரத்தை வீணடிக்கின்றார். எனவே அவருக்கு நேரம் வழங்க வேண்டாம்” என்று அப்போது சபைக்கு தலைமை தாங்கிக்கொண்டிருந்த ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. இம்ரான் மஹ்ரூப்பிடம் கூறினார். ஆனால், இதனைக்கணக்கில் எடுக்காது சாணக்கியன் எம்.பி தனது குற்றச்சாட்டைத் தொடர்ந்தார்.

இந்நிலையில் எழுந்த அமைச்சர் மஹிந்த அமரவீர, “கடமையில் இருந்த பொலிஸாரை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி தாக்க முயன்றார்; அச்சுறுத்தினார். தூஷண வார்த்தைகளால் திட்டினார். இது சரியா? பொலிஸார் தமது கடமைகளை செய்வதற்கான சுதந்திரம் தெற்கில் மட்டுமல்ல வடக்கிலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்” என்றார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் விமல் வீரவன்ச எம்.பி. செல் போனை கொடுத்ததை மறந்து விட்டீர்களா? நாம் இங்கு சண்டித்தனம் காட்டவில்லை என்று சாணக்கியன் எம்.பி கூறிக்கொண்டிருந்தார்.

அதன்போது எழுந்த அமைச்சர் ஹெகலிய ரம்புக்வல, “விவாதத்திற்கான நேரத்தை இவர் வீணடித்துக் கொண்டிருக்கின்றார். இவரின் ஒழுங்கு பிரச்சினைகளுக்கு இடமளிக்க வேண்டாம் . சபாபீடத்தில் இருந்தால் சபையை ஒழுங்காக வழிநடத்த வேண்டும்” என சபைக்கு தலைமை தாங்கிய இம்ரான் எம். பி.யைப் பார்த்துக்கூறினார்.

ஆனால் சபைக்கு தலைமை தாங்கிய இம்ரான் எம். பி. சாணக்கியன் எம்.பி யின் ஒழுங்குப்பிரச்சினைகளுக்கு தொடர்ந்தும் இடமளித்தார். இதனால் சினமடைந்த அரச தரப்பினர் சபையை ஒழுங்காக கட்டுப்படுத்துமாறும் இல்லாது விட்டால் சபா பீடத்திலிருந்து இறங்கி அவரின் ஆசனத்துக்கு செல்லுமாறும் இம்ரான் மஹ்ரூப் எம்.பியைப்பார்த்து கூச்சலிட்டனர்.

ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை எழுப்பிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் எம்.பியான ஸ்ரீதரன், “இங்கு அமைச்சர் மஹிந்த அமர வீர, கஜேந்திரகுமார் எம்.பி பொலிஸாரைத் தாக்கியதாக அப்பட்டமான பொய் ஒன்றைக் கூறினார். கஜேந்திரகுமார் எம்.பி பொலிஸாரைத் தாக்கினாரா அல்லது பொலிஸார் கஜேந்திரகுமார் எம்.பியைத் தாக்கினார்களா என்பதனை முதலில் சரியாக தெரிந்து கொள்ள வேண்டும். கஜேந்திரகுமார் எம்.பியைத் தாக்கிய பொலிஸாரை முதலில் கைது செய்யுங்கள். அவர்களிடம் விசாரணை நடத்துங்கள். கஜேந்திரகுமார் எம். பி. யை தாக்கி விட்டு பக்கத்திலுள்ள பாடசாலை பரீட்சை மண்டபத்துக்குள் ஓடிச் சென்று ஒளிந்து கொண்டவர்கள் பொலிஸார் தான்” என்றார்.

# கஜேந்திரகுமார் எம்.பியின் வெளிநாட்டுத் தடை நீக்கம்

கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் புதன்கிழமை (07) மாலை 5.30 மணியளவில் கஜேந்திர குமார் பொன்னம்பலம் எம்.பி ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, அவர் நீதவானிடம் இரகசிய வாக்குமூலமளித்தார். இதைத் தொடர்ந்து, அவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் சரீரப்பிணை வழங்கப்பட்டதுடன் வெளிநாட்டுக்கு செல்வதற்கு விதிக்கப்பட்ட தற்காலிக தடையும் நீக்கப்பட்டது. இதையடுத்து, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள், நீதவானின் நேரடிப்பார்வையின் கீழ் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர். இதையடுத்து, உதவி பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையில் விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்று நீதவான் கட்டளையிட்டார்.

# இலங்கை மத்திய வங்கியே நெருக்கடி ஏற்படுத்தியது

கடந்த வருடத்தின் நிலைமை அவசியமில்லை. 2019 இல் எப்படி இருந்தது என்பதுதான் வேண்டும்.

நாங்கள் நல்ல நாட்டையே ஒப்படைத்தோம். அமைதியான, வர்த்தகம் என்பனவற்றில் உயர்ந்த நாடாக இருந்தது. இப்போது நிலைமை எப்படி இருக்கின்றது. நாங்கள் ஒப்படைக்கும் போது இருந்த அந்நிய செலாவணி கையிருப்பை பூச்சியம் வரையில் குறைத்துள்ளனர். அது தொடர்பில் பாராளுமன்றத்திற்குகூட அறிவிக்கவில்லை.

மத்திய வங்கியே இந்த நெருக்கடிகளை ஏற்படுத்தியது. அந்நிய செலாவணி கையிருப்பை பயன்படுத்தியே கடனை செலுத்தியுள்ளது. எவ்வாறாயினும் சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்றது நல்லதுதான் என்றார்.

# மக்களை ஏமாற்ற வேண்டாம்...

பல ஆண்டுகளாக செயற்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் விளைவாக, ஆரோக்கியமான மாணவ தலைமுறை உருவானதால் இவ்வேலைத் திட்டம் மீண்டும் எப்போது ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (07) மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

43 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படவில்லை என்று இங்கு கல்வி அமைச்சர் குறிப்பிட்டார். பொய்யான தகவல்களை கூறி மக்களை ஏமாற்ற வேண்டாம் என்று எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்தார்.

1993 ஆம் ஆண்டு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ இலவச சீருடை மற்றும் மதிய உணவை வழங்கியதாகவும், 1994 இல் ஆட்சிக்கு வந்த அப்போதைய அரசாங்கத்தால் அது நிறுத்தப்பட்டதாகவும் சுட்டிக்காட்டினார்.

எனவே, சகல பாடசாலை மணவர்களுக்கும் இந்த மதிய உணவும், பாடசாலை சீருடையும் அவர்களின் நிலையைப் பொருட்படுத்தாமல் வழங்க வேண்டும் எனவும், பாடசாலை தலைமுறை பிள்ளைகளுக்கு போஷாக்கான உணவுவேளை ஒன்றை வழங்குவது தற்போதைய அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றார்.

இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு எதுவும் கிடைக்கப் பெறவில்லை என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சபையில் தெரிவித்த போது, கிடைக்கும் பணத்தை முறையாக முகாமைத்துவம் செய்து பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

# நெடுந்தீவு படகு விபத்து; 38 பேர் பத்திரமாக மீட்பு

38 பேருடன் கட்டுமானப் பொருட்களை ஏற்றிச் சென்ற குறித்த ட்ரோலர் படகு நெடுந்தீவின் இறங்குதுறைக்கு அருகே கடலில் ஏற்பட்ட அலையின் காரணமாக படகின் அடிப்பகுதி தரைப்பகுதியில் மோதியுள்ளது.

இதனால் படகின் அடிப்பகுதியில் துளை உண்டாக, உள்ளே தண்ணீர் கசிவு ஏற்பட்டு அது ஆபத்தில் உள்ளதாக வடக்கு கடற்படை கட்டளை பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்புக்கு உடனடியாக பதிலளித்த கடற்படையினர், கடலோர ரோந்து படகுகள் மற்றும் இலங்கை கடற்படையின் இரு சிறிய படகுகளை பயன்படுத்தி விபத்தில் சிக்கிய ட்ரோலர் படகையும் அதில் இருந்தவர்களையும் மீட்டனர்.

மேலும், கடற்படையின் இந்த உடனடி நடவடிக்கையின் காரணமாக, பெரும் உயிர் மற்றும் உடைமை இழப்புகளை தவிர்க்க முடிந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### டுபாயில் இருந்து வந்த

# தாய்க்கும் மகளுக்கும் குரங்கு அம்மை தொற்று

குரங்கு அம்மை என்பது பெரியம்மை போன்ற அறிகுறிகளைக் கொண்ட ஒரு நோயாகும் என்றும் அதன் தீவிரம் குறைவாக உள்ளது என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மத விவகாரம் மூவருக்கும் 21 வரை விளக்கமறியல்

பௌத்த மதத்தை அவதூறாகப் பேசிய குற்றச்சாட்டில் நடாஷா எதிரிசூரிய கடந்த மே மாதம் 28ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட நிலையில், சமூக ஊடக ஆர்வலர் புருனோ திவாகரா, குறித்த விடயத்தை பகிர்ந்தமை குறித்து கடந்த மே மாதம் 31ஆம் திகதி இணையக் குற்றப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

‘மோடாபிமானய’ என்ற நிகழ்ச்சியில் பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் நடாஷா கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சமூக ஊடகங்களில் வெளியிடும் கருத்துகளால், மதங்களுக்கிடையில் அமைதியின்மை ஏற்பட வாய்ப்புள்ளதாக பாஹியன்கல சாகர தேரரால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய கடந்த 28ஆம் திகதி இராஜாங்கனை சத்தாரதன தேரர் கைதுசெய்யப்பட்டார்.

# பினாமிகள் மூலம் சுருட்டும் வங்கி அதிகாரிகள்

இதில் மக்கள் வங்கி, இலங்கை வங்கி உள்ளிட்ட அரச வங்கிகளுக்கு விசேட சிறப்பு சலுகைகள் வழங்கப்பட்டிருந்துன.

அதன் உடன்படிக்கைக்கு அமைய அந்த வங்கிகளின் நிறைவேற்று சபையின் தீர்மானத்தின் ஊடாக அந்த சொத்துக்களை ஏலவிற்பனைக்கு விட முடியும். பின்னர் அது தொடர்பான சட்டத்தில் திருத்தத்தை கொண்டுவந்து தனியார் வங்கிகளுக்கும் அந்த சிறப்பு சலுகைகள் வழங்கப்பட்டன. இதன்படியே இப்போது நடக்கின்றன.

இந்நிலையில் சில வங்கிகளில் அதிகாரிகள் மிகவும் மோசடியானவர்களே. வேண்டுமென்றே கொடுக்கல் வாங்கல்காரர்களை ஏமாற்றி, சூழ்ச்சியான வகையில் அந்த சொத்துக்களை தங்களின் ஆட்களையே அனுப்பி அவற்றை விற்கும் செயற்பாடுகள் நடக்கின்றன.

இதேவேளை மத்திய வங்கியின் அனுமதியை பெற்றது என்று கூறப்படும் நிதி நிறுவனங்கள் பல உள்ளன. அந்த நிறுவனங்களின் பலர் தமது வாகனங்கள் உள்ளிட்ட சொத்துக்களை அடகு வைத்து பணம் பெறுகின்றனர். அதன்போது அவர்களின் காணிகள், வீடுகள் உள்ளிட்ட மற்றைய சொத்துக்களையும் எழுதிக்கொள்கின்றனர்.

அவற்றையும் அந்த பணத்தை மீள செலுத்திய பின்னரே கையளிப்பர். இதன்படி நொதாரிஸ் சட்டத்தில் திருத்தத்தை செய்துள்ளோம். ஆனால் பல நொதாரிசுகள் எந்தவித பொறுப்புகளும் இன்றி உரித்து போன்று எழுதுகின்றனர்.

இதன்படி இனி நொதாரிசுகள் உரித்துக்களை எழுதும் போது, கையளிப்பு உரித்தாக இருந்தால் அதன் கொடுக்கல் வாங்கல் நடந்தது என்பதனை உறுதிப்படுத்தியே அதனை எழுத வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் தண்டனைக்கு உள்ளாகும் வகையில் சட்டத்தில் திருத்தம் எதிர்வரும் இரண்டு மாதங்களில் செய்யப்படும் என்றார்.

# சொத்துக்களை அரசுடமை ஆக்குவது முறையற்றது

“பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள கொள்கை திட்டங்களினார் தொழிற்துறையினர் பலர் தற்கொலை செய்துள்ளார்கள். பலர் வாழ முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள், கைத்தொழில் துறையினரின் முறையற்ற தீர்மானங்களினால் நாடு வங்குரோத்து நிலையடையவில்லை.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் எடுத்த தவறான தீர்மானங்களால் நாடு வங்குரோத்து நிலையடைந்தது. பணவீக்கம் அதிகரிக்கப்பட்டதை தொடர்ந்து வங்கி கடன்களின் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டது. இதனால் சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறையினர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறையினர் வங்கிகளில் பெற்றுக்கொண்ட வங்கி கடன்களை மீள செலுத்த முடியாமல் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள்.

கடந்த ஜனவரி மாதம் முதல் பெப்ரவரி மாதம் வரையான காலப்பகுதியில் மாத்திரம் தொழில் துறையினரின் 4 ஆயிரம் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் அரசுடமைாக்கப்பட்டுள்ளன.

பல பில்லியன் ரூபாய் வங்கி கடன்களை பெற்றுக் கொண்டுள்ள அரசியல்வாதிகள் உரிய காலத்தில் நிலுவை தொகை செலுத்தாமல் உள்ள நிலையில் பொருளாதார பாதிப்பால் பாதிக்கப்பட்டுள்ள சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறையினரின் சொத்துக்களை அரசுடமையாக்குவது முறையற்றது”என்றார்.

# துவாயைக் கழற்றி மாணவியை துஷ்பிரயோகம் செய்ய முயற்சி

வீட்டுத்தோட்டத்தில் உள்ள கிணற்றில் குளித்து விட்டு, துவாயைக் கட்டிக் கொண்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த மாணவியை, இருளடைந்த இடத்தில் மறைந்திருந்த நபரொருவர், அம்மாணவி கட்டியிருந்த துவாயை அவிழ்த்து வீசி, பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்ற சம்பவமொன்று நிட்டம்புவையில் இடம்பெற்றுள்ளது.

உடலைக் கழுவி விட்டு அந்த மாணவி, இரவு 11 மணியளவிலேயே வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்துள்ளார். இந்தச் சம்பவத்தை அடுத்து, அம்மாணவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனால், நடைபெற்றுக் கொண்டிருக்கும் சாதாரண தரப் பரீட்சையில் இன்றைய (07) பரீட்சைக்கு அந்த மாணவியால் தோற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

அவரை கட்டிப்பிடித்து, உருண்டு புரளும் போது, அம்மாணவி அலறியுள்ளார். மகளின் அலறல் சத்தம் கேட்டவுடன் அவரது தாயார் ஓடோடி வந்துள்ளார். இந்நிலையில், அம்மாணவியை அவ்விடத்திலேயே விட்டு விட்டு, சந்தேக நபர் தப்பியோடி விட்டார் என பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. சந்தேக நபரை அடையாளம் கண்டு கொண்ட தாயும் மகளும் அவர் தொடர்பிலும் சம்பவம் தொடர்பிலும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். நிட்டம்புவ தலைமையக பொலிஸ் பிரிவின் சிறுவர் மற்றும் பெண்கள் விவகாரப் பணியக அதிகாரிகள் சந்தேக நபரைக் கைது செய்யும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பேக்கரியில் தீ; ஐவருக்கு காயம்

■ ஷேன் செனவிரத்ன

பேராதனை, கலஹா நகரில் உள்ள பேக்கரி மற்றும் ஹோட்டலில் ஏற்பட்ட தீயில், அங்கு பணியாற்றிய ஐவர், எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று கலஹா பொலிஸார் தெரிவித்தனர்.

பேக்கரியில் பண்டங்களை தயாரித்துக் கொண்டிருந்த போது, செவ்வாய்க்கிழமை (06) இரவு ஏற்பட்ட எரிவாயு கசிவை அடுத்து இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது என்று ஆரம்பக்கட்ட விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தத் தீயை அணைப்பதற்கு ஹோட்டல் பணியாளர்கள் முயன்ற போதே, அவர்கள் தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களில் கடும் காயங்களுக்கு உள்ளான ஒருவர் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு

# பால்மா பக்கெட்டுகள்

■ எப் முபாரக்



திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு பிரசவத்துக்காக வரும் கர்ப்பிணி தாய்மார்களின் நலன் கருதி, பிரசவம் நடந்தவுடன் உதவும் கரங்கள் அமைப்பின் ஒத்துழைப்புடன் வழங்கப்பட்டு வரும் பால்தேநீருக்கான பால்மா பக்கெட்டுகள், நேற்று (07) திருகோணமலை ஹற்றன் நஷனல் வங்கி பிரதான கிளையால் (வங்கி ஊழியர்கள் நலன்புரிச் சங்கம்) அதன் முகாமையாளர் ஜனாப் மக்பூல் ஹமீட்டால் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஜகத் விக்கிரமரத்னவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இதன் போது, உதவும் கரங்கள் அமைப்பின் ஆலோசகர் ஜவ்பர் ஹசன், அமைப்பாளர் ஏ.எஸ் ஜவாஹிர் மற்றும் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

# முறிந்து விழுந்த மரத்தில் குளவிக்கூடு: அகற்றுவதில் சிக்கல்

■ துவாரகஷான், டி சந்ரு, கௌசல்யா, செதீவாகரன்



ஹட்டன்- நுவரெலியா பிரதான வீதியில் லிந்துலை மட்டுகலை தோட்ட வீதியோரத்தில் பழைமை வாய்ந்த வாகை மரம் புதன்கிழமை (07) காலையில் முறிந்து விழுந்ததால் அப்பகுதியில் போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டிருந்தது.

சுமார் மூன்று மணி நேரம் இப்பாதிப்பு ஏற்பட்டிருந்தது. அத்தோடு நுவரெலியா- தலவாக்கலை, ஹட்டன்- பதுளை போன்ற பிரதேசங்களுக்குச் செல்லும் போக்குவரத்து சேவைகளும் பாதிக்கப்பட்டிருந்தன.

முறிந்து விழுந்த மரத்தினை அப்புறப்படுத்தும் வேலைகளை மட்டுக்கலை தோட்ட மக்கள் லிந்துலை பொலிஸார் முன்னெடுத்தனர். அதன்பின் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

முறிந்து விழுந்த மரத்தில் குளவி கூடுகள் காணப்பட்டதால் மரத்தை அப்புறப்படுத்தும் பணியில் பெரும் சிரமத்தை இவர்கள் எதிர்கொண்டனர்.

அத்தோடு வீதியோரங்களில் பாதுகாப்பற்ற நிலையில் உள்ள மரங்களை அப்புறப்படுத்துமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

மரம் முறிந்து விழுந்ததால் வைத்தியசாலைக்கு செல்லும் பொதுமக்கள் ஏனைய தேவைகளுக்கு செல்லும் பிரதேச மக்களும் பல்வேறு சிரமத்துக்கு முகம் கொடுத்தனர்.

முறக்கொட்டாஞ்சேனை இராணுவ

# முகாமின் ஒரு பகுதி விடுவிப்பு



■ எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு, முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாம் அமைந்துள்ள தனியாருக்கு சொந்தமான காணிகள், 32 வருடங்களின் பின்னர் செவ்வாய்க்கிழமை (06) விடுவிக்கப்பட்டு, கையளிக்கப்பட்டன.

தனியாருக்கு சொந்தமான 8.6 ஏக்கர் காணியே கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ ஹெட்டியாராட்சியால் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்ராஜாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து, காணி உரிமையாளர்களை இனங்கண்டு உரியவர்களிடம் காணிகளை ஒப்படைக்கும் நடவடிக்கைக்காக, மாவட்ட அரசாங்க அதிபரால் கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் எஸ். ராஜ்பாபுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 59 தனிநபர்களுக்கு சொந்தமான காணிகளே, இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# அரச வேலை பெற்றுத் தருவதாக நிதி மோசடி

■ எஸ். றொஷேயன் லெம்பேட்



மன்னார் மாவட்டத்தில், மாவட்டச் செயலகம் உள்ளடங்கலாக அரச திணைக்களங்களில் வேலை பெற்றுத் தருவதாக கூறி, அப்பாவி இளைஞர், யுவதிகளிடம் பெருந்தொகையான நிதி மோசடி செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து, மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் (06) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

கடந்த திங்கட்கிழமை (05) கூட இவ்வாறு வேலை பெற்று தருவதாகப் பணத்தை பெற்றுக் கொண்டு, திணைக்களத்தின் உயரதிகாரிகளோடு குறித்த மோசடிக்காரர்கள் கதைப்பது போல், தொலைபேசியூடாகக் கதைத்து, பாசாங்கு செய்து மக்களை ஏமாற்றியமை தெரியவந்துள்ளது.

இது மட்டுமின்றி பொருட்கள் தருவதாகவும் பிரதேச செயலகங்கள், திணைக்களங்கள் என்பவற்றைக் கூறியும் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளார்கள்.

ஆகவே, இது தொடர்பாக மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பிரதேச செயலகங்கள் அரச திணைக்களங்களில் அரச பதவி பெறுவதற்கு, எந்த ஒரு நிதியையும் பெற்றுக் கொண்டு அரசு பதவிகள் வழங்கப்படுவதில்லை. அதேபோல், பொருட்களும் கூட தனி நபர்களுக்கு வழங்குவதற்கு எந்த ஒரு நடைமுறையும் இல்லை. அவ்வாறு செய்வது சட்டத்திற்கு முரண்பாடானது ஆகும்.

இவ்வாறான நிதி மோசடிகளில் ஈடுபடுபவர்கள் உங்களை சந்திக்கும் போது, உடனடியாக அவர்களுடைய அடையாள அட்டையை உங்களுடைய திறன்பேசியில் பதிவு செய்து கொள்வதோடு, அருகில் உள்ள கிராம அலுவலர் அல்லது பொலிஸ் நிலையத்துக்கு தகவல்களை வழங்குவதுடன், நிதி மோசடிகள் மன்னார் மாவட்டத்தில் இனிமேல் நடைபெறாமல் இருப்பதற்கு, பொது மக்களின் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றேன் எனவும் தெரிவித்தார்.

# பொலிஸ் ஜீப் புரண்டது; மூவர் காயம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ



நோர்வூட் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார், செவ்வாய்க்கிழமை (06) இரவு ரோந்து சேவையில் ஈடுபட்டிருந்த நிலையில், அவர்கள் பயணித்துக்கொண்டிருந்த ஜீப், பள்ளத்தில் விழுந்து விபத்துக்கு உள்ளானதில் மூவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மூவரும், டிக்கோயா- கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நோர்வூட்- பொகவந்தலாவை பிரதான வீதியில், வெஞ்சர் தேயிலைத்தொழிற்சாலைக்கு அண்மையிலேயே செவ்வாய்க்கிழமை (06) இரவு 11 மணியளவில் பள்ளத்தில் புரண்டு விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் சிலர் ஈடுபட்டுக்கொண்டிருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து, சென்ஜோன்டிலரி தோட்டத்தில் இருந்து நியூவெளியை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

காயமடைந்த பொலிஸாரை அந்தத் தோட்டத்தைச் சேர்ந்த மக்கள் காப்பாற்றி, வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

# பிளாஸ்டிக்கை தவிர்க்க கிராம மக்கள் உறுதிமொழி

■ ஏ.எச்.ஏ ஹுஸைன்



பிளாஸ்டிக் பொருட்களாலும் நெகிழிப் (பொலிதீன்) பொருட்களாலும் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் மிக மோசமான பாதிப்புகளைத் தவிர்க்கும் முகமாக, அப்பொருட்களைத் தமது அன்றாடப் பாவனையில் இருந்து தவிர்ந்து கொள்வதற்கு, கிராம மக்கள் உறுதிபூண்டிருப்பதாக இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் தங்கராஜா திலீப்குமார் தெரிவித்தார்.

வாகரை, பால்சேனை கடற்கரையில் பிளாஸ்டிக் உட்பட நெகிழிகளையும் இன்னும் பிற உக்காத பொருட்களையும் திண்மக் கழிவுகளையும் அகற்றி, கடற்கரையைத் துப்புரவு செய்யும் சிரமதானப் பணி செவ்வாய்க்கிழமை (06) இடம்பெற்றது.

பால்சேனை, நாகபுரம் ஆகிய கிராமங்களின் மக்கள் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் ஏற்பாட்டில் கடற்கரையோர சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

'வீஎபெக்ற்' (We Effect) நிறுவனத்தின் நிதி அனுசரணையோடு, இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்டமிடலில் வாகரைப் பிரதேச செயலகத்தின் ஒத்துழைப்போடு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வின் இறுதியில் பொலிதீன், பிளாஸ்டிக் பாவனையை அன்றாட வீட்டு உபயோகத்தில் இருந்து தவிர்ப்போம் எனும் உறுதிமொழியும் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஐந்து மாதங்களில்

# போதைப் பொருளுடன் சம்பந்தப்பட்ட 321 நபர்கள் கைது

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜனவரி முதலான கடந்த ஐந்து மாதங்களில் 36. 227 கிலோ கிராம் கஞ்சாவும் 251.178 கிலோ கிராம் ஹெரோயினும் 5.082 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டுள்ளதுடன் 321 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு 329 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் 35 இலட்சத்து நாலாயிரத்து 500 ரூபாய் தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பிராந்திய பொலிஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்துவரும் போதைப் பொருள் பாவனையைத் தடுக்கும் வகையில் பொலிஸாரால் விசேட சுற்றி வளைப்புகள் முன்னெடுக்கப்பட்டு, போதைப்பொருட்கள் மீட்கப்பட்டு வருவதுடன், சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

# வெளிவிவகார அமைச்சரும் கிழக்கு ஆளுநரும் கலந்துரையாடல்

■ அ. அச்சுதன்



வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (06) கொழும்பில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் சுற்றுலா, மீன்வளத்துறை, கனிம மணல், விவசாயம் போன்ற பல்வேறு துறைகளில் வெற்றிகரமாகச் செயற்படும் நாடுகளின் நிபுணத்துவத்தை பெற்றுக்கொள்வது தொடர்பில் அமைச்சர் அலி சப்ரியிடம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

ஆளுநரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று அதற்கு சாதகமான பதிலை வெளிவிவகார அமைச்சர் அளித்துள்ளார்.

# இனவாதம் தொடர்ந்தால் பிரச்சினை நேரிடும்



பெருந்தோட்டங்களில் தொடர்ந்தும் இனவாத செயற்பாடு தொடர்ந்தால் பெருந்தோட்ட நிர்வாகங்கள் பாரியதொரு பிரச்சினைக்கு முகம் கொடுக்க நேரிடும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பதுளை, கலன் தோட்டத்தில் முறையற்ற முகாமைத்துவம், நிர்வாக சீர்கேடு தொடர்பில் தொடர்ந்தும் பிரச்சினைகள் நிலவி வந்த நிலையில், களத்துக்கு நேரடி விஜயம் மேற்கொண்டு இருந்தார்.

இதன் போது தோட்ட முகாமைத்துவ அதிகாரிக்கு எதிராக மக்கள் முறைப்பாடு முன்வைத்திருந்ததோடு தோட்ட அதிகாரியை உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

பெருந்தோட்ட மலையக மக்களுக்கு எதிராக இனவாத ரீதியில் வார்த்தை பிரயோகங்கள், தோட்ட முகாமைத்துவ அதிகாரிகளால் பிரயோகிக்கப்படுவது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

நிலைமை தொடர்ந்தால் பாரியதொரு தொழிற்சங்க போராட்டத்தை சந்திக்க நேரிடும். பெருந்தோட்ட மலையக தொழிலாளர்களுக்கும் சுய கௌரவம், தன்மானம் இருக்கின்றது. இந்நாட்டிற்காக பிரதிபலன் ஏதும் இன்றி உழைக்கும் நம் சமூகத்தை சீண்டிப் பார்த்தால் பாராளுமன்றம் வரை எதிரொலிக்கும் என்றார்.

# ரயில் சாரதியின் சமயோசிதத்தால் உயிர் தப்பிய வயோதிபர்

■ எஸ்.எம் பர்ஸான்



தண்டவாளத்தில் உறங்கிக் கொண்டிருந்த வயோதிபர், ரயில் சாரதியின் சமயோசித செயற்பாட்டால் உயிர் தப்பிய சம்பவம், செவ்வாய்க்கிழமை (06) இரவு 8.40 மணியளவில் மன்னம்பிட்டி காட்டுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கோட்டை ரயில் நிலையத்திலிருந்து பிற்பகல் 3 மணியளவில் மட்டக்களப்பு நோக்கி பயணித்த ரயில், மன்னம்பிட்டி காட்டுப் பகுதியில் சென்று கொண்டிருந்த போது, தண்டவாளத்தில் வயோதிபர் ஒருவர் தூங்கிக் கொண்டிருந்ததை அவதானித்த ரயில் சாரதி, சமயோசிதமாக ரயிலை நிறுத்தி வயோதிபரை காப்பாற்றியுள்ளார்.

கடும் போதையில் இரத்தக் காயங்களுடன் காணப்பட்ட சுமார் 75 வயது மதிக்கத்தக்க வயோதிபர், ரயிலில் ஏற்றப்பட்டு, மன்னம்பிட்டி ரயில் நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

# தவறான முடிவுகளால் தள்ளாடும் மக்களும் திவாலாகும் நாடும்

கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்தவர்களால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தவறான முடிவுகளால், நாடு திவாலான நிலைக்கு தள்ளப்பட்டது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் இவ்வாறான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு இருந்தமையால், அவ்வாறான திறமை மற்றும் போதியளவு அனுபவமற்றவர்களை தெரிவு செய்த மக்களுக்கு நல்ல படிப்பினையை ஏற்படுத்தியிருந்தது.

இவ்வாறான நிலையில், கடந்த இரண்டாண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வரும் மக்கள் மீது, சர்வதேச நாணய நிதியத்தை மேற்கோள் காண்பித்து வரி விதிப்பனவு, மின்சாரக் கட்டண அதிகரிப்பு, எரிபொருள் விலை அதிகரிப்பு போன்ற அன்றாட வாழ்க்கைச் செலவு அதிகரிப்பில் நேரடியாக தாக்கம் செலுத்தும் பல முக்கிய பொருட்களின் விலைகளின் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், 18 வயதைப் பூர்த்தி செய்த அனைவருக்கும் வரிக் கோவை ஒன்றைத் திறப்பது தொடர்பான அறிவிப்பு, கடந்த வாரம் வெளியாகியிருந்தது. நாட்டின் மேம்பாட்டுக்கும், வளர்ச்சிக்கும் வரி செலுத்துவது முக்கியமானது. 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வரிக் கோவையை ஆரம்பித்து, அதைப் பேணச் செய்வது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானம், ஒரு பக்கம் வரவேற்கத்தக்கதாக அமைந்திருந்தாலும், வரி செலுத்தும் மக்களுக்கு உகந்த சேவை கிடைக்கின்றதா என்பது கேள்வியாகவே அமைந்துள்ளது.

குறிப்பாக, பொது மக்களுக்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட வேண்டிய வசதிகளில் முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டும். அத்தியாவசிய தேவையான மருந்துப் பொருட்களைக் கூட வைத்தியசாலைகளில் பெற்றுக் கொள்வதில் சிக்கல்கள் காணப்படுகின்றன.

இந்நிலையில், 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வரிக் கோவை பதிவு செய்யும் முறைமை, மக்களை பாதிக்காத வகையில் அமைந்திருக்க வேண்டும். நீண்ட வரிசைகளில் காத்திருக்கச் செய்து, இந்த முறைமையை மேற்கொள்ளாது, எரிபொருள் QR முறைமைக்கு மக்களை பதிவு செய்தமை போன்று, இலகுவாக இந்தக் கோவைக்கு மக்களை பதிவு செய்து கொள்ளக் கூடிய வசதிகள் காணப்பட வேண்டும்.

வரி செலுத்தும் மக்கள் மீது, அதிகாரத்திலுள்ளவர்கள் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, அரசாங்கத்தின் தவறான செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல் எழுப்புபவர்கள் மீது அதிகாரத்தைப் பிரயோகித்து, அவர்களை ஒடுக்கும் செயற்பாடுகளைத் தவிர்க்க வேண்டும். இதற்கு ஒரு சிறந்த உதாரணம், அண்மையில் கைது செய்யப்பட்ட 'யூடியுபர்' ப்ரூனோ திவாகர.

மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவோர் என தம்மை அடையாளப்படுத்திக் கொள்வோர், தமது வரப்பிரசாதங்களைப் பற்றி அக்கறை கொண்டுள்ளதுடன், பொது மக்கள் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள போதிலும், வரி விலக்களிப்புகளுடனான தமக்குரிய சொகுசு சுகபோக வாழ்க்கையிலிருந்து விடுபட்டதாக தெரியவில்லை.

இந்நிலையில், 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வரிக் கோவை திறப்பு என்பது தொடர்பான தீர்மானத்தின் காரணமாக, நாட்டிலிருந்து புத்திஜீவிகள் மற்றும் இளம் வயதினர் வெளியேறும் நிலை மேலும் அதிகரிக்கக்கூடும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

மனித உயிர்களுக்கு மட்டுமல்ல, பிறப்பு எடுக்கும் எல்லா ஜீவன்களுக்கும் இந்தப் பிறப்பு ஒரே ஒரு தடவைதான். இது ஓர் அரிய சந்தர்ப்பம். அடுத்த பிறவி பற்றி ஆராயாமல், தற்போது வாழும் காலத்தில் செய்ய வேண்டிய, நல்ல கருமங்களைச் செய்வதே சிறப்பானதாகும்.

இருக்கும் காலத்தில் நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்பதில் நேரிய தெளிவும் உழைப்பும் அவசியமானது.

ஒவ்வொரு பொழுதும் கடந்த வண்ணமிருக்கின்றது. எனவே போன பொழுது மீண்டும் எழுவதில்லை. அவதானமாக அறிவுடன் இயங்குவதே ஆக்கபூர்வமானதாகும்.

நாளைக்கு எனச் சொல்வதை நிறுத்துங்கள். ஆனால், எல்லா வேலைகளையும் ஒரே நாளில் செய்ய முடியாது. செய்யும் கருமங்களை அட்டவணைப்படுத்துக!

முறைப்படி கருமம் ஆற்றுவதற்கு, அவை பற்றிய அறிதலுடன், தெரியாதவற்றைக் கேட்டு உணர்ந்து செய்தால், காரிய சித்தி உண்டாகும்.

சில தடவைகள் எதிர்பாராத துன்பங்கள் நடப்பதும் இயற்கை. ஆனால், அதற்குள் தொடர்ந்து சுழலாமல், இயங்கியே ஆகவேண்டும்.

நமக்கும் குடும்பத்துக்கும் சேமிப்பு அவசியம் தேவை. உலகுக்கான சேவையை மறக்காதீர்கள்!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# முன்னணிக்கு எதிரான அச்சுறுத்தலும் இன்னும் சிலவும்



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து நேற்று புதன்கிழமை காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார். பாராளுமன்றத்தில் சிறப்புரிமை விடயத்தை எழுப்பி உரையாற்ற இருந்த நிலையில், அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வடமராட்சி கிழக்கிலுள்ள விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்றை கடந்த இரண்டாம் திகதி பிற்பகலில், மருதங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் நடத்தினார். அப்போது அங்கு வந்த, தங்களை யார் என வெளிப்படுத்தாத நபர்கள் இருவர், சந்திப்புக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நின்றிருக்கிறார்கள்.

அது தொடர்பில், முன்னணியின் தலைவரும் செயற்பாட்டாளர்களும் கேள்வி எழுப்பிய போது, தங்களை புலனாய்வாளர்கள் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதில் ஒருவர், அந்த இடத்தை விட்டு தப்பிச் சென்றிருக்கிறார். இந்தப் பிணக்கின் போது, பொலிஸ் அதிகாரி ஒருவர் கஜேந்திரகுமாரை நோக்கி, துப்பாக்கி முனை அச்சுறுத்தல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டு முன்னணியால் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. துப்பாக்கி முனை அச்சுறுத்தல் விடுத்த பொலிஸ் அதிகாரி, தாளையடி றோமன் கத்தோலிக்க பாடசாலை வளாகத்துக்குள் நின்றிருக்கிறார். அவரது படங்களை ஊடகங்கள் வெளியிட்டிருக்கின்றன.

மருதங்கேணி பொது விளையாட்டு மைதானமும் தாளையடி றோமன் கத்தோலிக்க பாடசாலையும் ஒரு பக்க மதிலை எல்லையாக பகிர்ந்து கொள்கின்றன. முன்னணியின் சந்திப்பில் ஏற்பட்ட குழப்பத்தில், தாளையடி பாடசாலை வளவுக்குள் இருந்து கண்காணித்த பொலிஸ் அதிகாரியே துப்பாக்கி முனை அச்சுறுத்தலை விடுத்தார் என்ற விடயம் முன்வைக்கப்படுகின்றது.

தாளையடி றோ.க பாடசாலை, க.பொ.த (சா/த) தரப் பரீட்சை நிலையமாகச் செயற்பட்டு வருகின்றது. இந்த விடயங்களுக்குப் பின்னரான விசாரணைகளை அடுத்து, இதுவரை முன்னணியின் இரண்டு செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அத்தோடு, மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் வந்து வாக்குமூலம் அளிக்கும் வரையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளிநாடுகளுக்கு செல்வதற்கான பயணத்தடையை கிளிநொச்சி நீதிமன்றம் விதித்திருக்கின்றது. இந்த நிலையில், அவர் நேற்று காலை கைது செய்யப்பட்டார்.

முன்னணியின் சந்திப்புக்குள் புலனாய்வாளர்கள் நுழைந்த விடயமோ, பொலிஸ் அதிகாரி ஒருவர் துப்பாக்கி முனை அச்சுறுத்தல் விடுத்ததான விடயமோ பொலிஸாரால் கருத்தில் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

மாறாக, பரீட்சை நிலையத்துக்கு அண்மித்த பகுதியில் ஆட்களைத் திரட்டி, சந்திப்பை நடத்திய விடயம் பொலிஸாரின் நடவடிக்கைகளுக்காக, முன்னணிக்கு எதிராக இப்போது பயன்படுத்தப்படுகின்றது.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தொடர் போராட்டங்களை நடத்துகின்ற ஒரு தரப்பு. தற்போது தையிட்டியில் தனியார் காணிகளில் அமைக்கப்பட்டிருக்கின்ற விகாரைக்கு எதிரான தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

இந்தப் போராட்டத்தை எப்படியாவது முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்பதற்கான வேலைகளில் பொலிஸாரும் படைத்தரப்பும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது. இந்தத் தருணத்தில்தான், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மருதங்கேணியில் நடத்திய சந்திப்பில் ஏற்பட்ட குழப்பத்தை, பொலிஸார் தங்களுக்கு சார்பாகக் கையாள முயல்கின்றார்கள்.

ஏனெனில், முன்னணியின் செயற்பாட்டாளர்கள் இருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கஜேந்திரகுமாருக்கான பயணத்தடையும் விதிக்கப்பட்டிருக்கின்றது. இதனால், முன்னணியின் செயற்பாட்டாளர்களை மனதளவில் உடைத்து வீடுகளில் உட்கார வைக்க முடியும் என்பது எதிர்பார்ப்பு.

முள்ளிவாய்க்கால் முடிவுக்கு பின்னரான காலத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்போடு ஏற்பட்ட முரண்பாடுகளை அடுத்து, கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய கஜேந்திரகுமார், கஜேந்திரன் உள்ளிட்டவர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை தோற்றுவித்தார்கள். அன்று முதல், மக்கள் போராட்டங்களில் முன்னணி பங்கெடுத்து வருகின்றது. இரண்டு பொதுத் தேர்தல்களில் முன்னணியை தமிழ் மக்கள் மிக மோசமாக தோற்கடித்த போதிலும், முன்னணி மக்கள் போராட்டங்களில் பங்களித்து வந்திருக்கின்றது. 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முன்னணிக்கான அங்கிகாரத்தை யாழ்ப்பாண மக்கள் குறிப்பிட்டளவு வழங்கினார்கள். அதிலிருந்து இன்னும் தெம்போடு இயங்கிய முன்னணி, கடந்த பொதுத் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் ஓர் ஆசனத்தையும், தேசிய பட்டியல் ஊடக இன்னோர் ஆசனத்தையும் வென்றது.

முன்னணி மீது தமிழ் மக்கள் அதிகம் அதிருப்தி வெளியிடும் விடயம், போராட்ட களத்தில் தனியாவர்த்தனம் செய்ய முயல்கின்றமை ஆகும். தமிழ்த் தேசிய பரப்பில் எழும் பிரச்சினைகள் 99 சதவீதமானவை, அனைத்துத் தமிழ்த் தேசிய கட்சிகளும் ஒன்றிணைந்தே போராட வேண்டிய விடயங்கள் ஆகும்.

ஆனால், முன்னணி அந்த ஒன்றிணைவு குறித்து ஒருபோதும் தயாராக இருப்பதில்லை. தாங்கள் தனித்துத் தெரியவேண்டும் என்பதற்காகப் பல போராட்டங்களை தனித்து நடத்தியிருக்கிறார்கள்.

இதனால், இவர்கள் என்ன போராட்டத்தை முன்னெடுத்தாலும் அங்கு செல்வதிலோ, ஒத்தாசை வழங்குவதிலோ ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகள் ஆர்வம் காட்டுவதில்லை. ஏனெனில், அங்கு சென்றால், முன்னணியின் தலைவர்கள் முகத்தை மற்றப்பக்கம் திருப்பிக் கொள்கிறார்கள். இரண்டாம் மட்டத் தலைவர்களோ, ஏனைய கட்சித் தலைவர்கள், முக்கியஸ்தர்களுக்கு எதிராக கோசங்களை எழுப்புகிறார்கள்.

தையிட்டியில் இடம்பெற்று வரும் போராட்டத்தில் ஆரம்ப நாள்களில் கலந்து கொள்ளச் சென்ற பல தமிழ்த் தலைவர்கள், முக்கியஸ்தர்களும்கூட இவ்வாறான செயற்பாடுகளை எதிர்கொள்ள வேண்டி வந்தது. இதனால், முன்னணி அவர்கள் நினைத்தது மாதிரியே அதிக தருணங்களில் தனியாவர்த்தனமே செய்ய வேண்டி ஏற்பட்டிருக்கின்றது.

தையிட்டி போராட்டத்தில் கட்சிகளையும் மக்களையும் இணைந்து கொள்ளுமாறு ஊடகங்களின் மூலம் அழைப்பு விடுத்துவிட்டு, போராட்டக்களத்துக்கு செல்லும் மாற்று கட்சியினர் மீது அவதூறுகளைச் செய்வது என்பது, அடிப்படை நாகரீகம் அற்றது.

இன்னொரு தளத்தில் முன்னணியினர், அதீத உணர்ச்சி வசப்படல் மூலம் போராட்டங்களை வெற்றிகரமாக நகர்த்தி விடலாம் என்று நினைக்கிறார்கள். அண்மையில் கூட முன்னணியின் பேச்சாளர் தன்னுடைய சட்டை கொலரைத் தூக்கி, "..நாங்கள் லோயர்ஸ், லோயர்ஸ்.." என்று பொலிஸாரை நோக்கி கூறிய காணொலி வெளியானது. அப்போது, அங்கிருந்த முன்னணியின் இன்னொரு முக்கியஸ்தரான சட்டத்தரணி ஒருவர், அவருக்கு வந்த சிரிப்பை அடக்க பலமாக முயன்று கொண்டிருந்தார். அவ்வாறான செயற்பாடுகளைக் காணும் போது, முன்னணியினர் தங்களை மக்களிடம் தனிப்பட்ட ரீதியில் முன்னிறுத்துவதற்கான செயற்பாடுகளின் போக்கில், மக்கள் போராட்டங்களை கையாள முயல்கிறார்கள் என்ற உணர்நிலை உண்டு. அதுபோல, நினைவேந்தல் நிகழ்வுகளிலும் தனியாவர்த்தனம் செய்து முன்னணியினர் குழப்ப நடவடிக்கைகளில் ஈடுபடுவதான தொடர் குற்றச்சாட்டு உண்டு.

தமிழ்த் தேசிய போராட்டக் களத்தில் செயற்படுகின்ற தரப்புகள், தங்களுக்குள் முட்டி மோதிக் கொண்டிருப்பது என்பது, வாக்கு அரசியலை முன்னிலைப்படுத்துவதால் தவிர்க்க முடியாததாக மாறியிருக்கின்றது. அதற்கு, முன்னணி என்கிற முகத்தோடு இருக்கும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸும் விதிவிலக்கல்ல.

ஆனால், பொதுப் பிரச்சினைகளில் தனியாவர்த்தனமும், சுய முன்னிலைப்படுத்தலுக்கான அதீத உணர்ச்சிவசப்படுதலும் மற்றவர்கள் மீதான அவதூறும் முன்னணியை மிக மோசமாக தனிமைப்படுத்தும். மருதங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் எழுந்த சச்சரவுகளின் போது, முன்னணியினருக்கு ஆதரவாக தமிழ்த் தேசிய பரப்பில் ஒரு சிலரைத் தவிர, ஏனையவர்கள் மௌனமாக இருப்பதற்கும் அதுதான் காரணம்.

அதுபோல, முன்னணியினர் தங்களின் போராட்டங்களை தேர்ந்தெடுப்பது போலவே, போராட்டத்தை அல்லது சந்திப்புகளை நடத்தும் இடங்கள் குறித்து போதியளவில் ஆய்ந்து அறிந்து கொள்வது அவசியமாகின்றது. முன்னணியின் செயற்பாட்டாளர்கள் கைது; கஜேந்திரகுமாருக்கு எதிரான பயணத்தடை என்பன, அவற்றின் போக்கில் இப்போது நிகழ்ந்திருக்கின்றன.

சந்திப்புக்குள் புகுந்து அச்சுறுத்தல் விடுத்த புலனாய்வாளர்கள் தப்பித்துக் கொள்ள, சந்திப்பை நடத்தியவர்கள் மீது, பரீட்சை நிலையத்துக்கான அச்சுறுத்தல் என்பது மாதிரி சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. தாங்கள் சட்டத்தரணிகள் என்று சட்டை கொலரை தூக்கி விட்டுக்கொள்வதால் பயனில்லை. மாறாக, மக்களை போராட்டக்களத்துக்கு கொண்டுவருதற்கான வேலைகளை கவனமாக முன்னெடுக்க வேண்டும்.

வடமராட்சிக் கிழக்கில் இப்போது முன்னணியின் இரண்டு செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறான கைதுகள், மக்களை பாரியளவில் அச்சுறுத்தும். அதுவும், போரின் வடுக்களை அதிகமாகத் தாங்கி நிற்கும் வடமராட்சி கிழக்கு போன்ற பகுதிகளிலுள்ள மக்களை அதிகமாகப் பாதிக்கும். ஏனெனில், புலனாய்வாளர்களின் தொடர் கண்காணிப்புக்குள் இருக்கும் பகுதி. இது, யாழ். மாவட்டத்துக்குள் இருந்தாலும் வடமராட்சி கிழக்கு, தொலைதூரத்தில் இப்பது மாதிரியான நிலையே இன்றும் இருக்கின்றது. அதற்குள், அசம்பாவிதங்களை ஏற்படுத்த நினைக்கும் தரப்புகள் செய்துவிட்டு சென்றுவிடும். அதனால், ஏற்படும் பயமும் மக்களை போராட்டங்களில் இருந்து ஒதுங்க வைத்துவிடும்.

முன்னணியினர் தமிழ்த் தேசிய போராட்டக் களத்தில் முக்கிய தரப்பாக எழுந்து வருகிறார்கள். அதேநேரம், அவர்கள் போராட்டத்தில் பங்கெடுக்கும் மக்கள், செயற்பாட்டாளர்களின் பாதுகாப்பு குறித்து அக்கறையோடு செயற்பட வேண்டும். வாய் ஜாலங்களால் போராட்டங்கள் நிலை பெறுவதில்லை. மக்களின் அர்ப்பணிப்பால்தான் போராட்டங்கள் எழுச்சி பெற்றிருக்கின்றன.

இதனை முன்னணி உணர்ந்து, அதற்கான முன்னேற்பாடுகளோடு செயற்பட வேண்டும். அதுதான், முன்னணிக்கும், தமிழ் மக்களுக்கும் நல்லது. ஏனெனில், அடிப்படைவாத ஆக்கிரப்பு சிந்தனை கொண்ட தென்னிலங்கையின் ஆட்சி ஆதிக்கத் தரப்புகளுக்கு எதிராகவே, தமிழ்த் தேசியம் போராடிக் கொண்டிருக்கின்றது என்ற உணர்நிலை அவசியம் வேண்டும்.

## கடிதங்கள்

### கரடிக்குளம் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

அநுராதபுரம் மாவட்டம், ஹொரவ்பொத்தான பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கரடிக்குளம் செல்லும் வீதி, பல வருடங்களாக புனரமைப்பு செய்யப்படவில்லை. எனவே இந்த வீதியை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

ஹொரவ்பொத்தான நகரில் இருந்து 12 கிலோ மீட்டர் தூரத்தில் இந்தக் கிராமம் அமைந்துள்ளது.

விவசாயம், சேனை பயிர்ச்செய்கை போன்றவற்றை பிரதான தொழிலாக கொண்டுள்ள இவர்களுக்கு, அவசரமாக ஏதும் நோய்வாய்ப்பட்டால் இந்த வீதியினூடாக செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குன்றும் குழியுமாக இந்த வீதி காணப்படுவதுடன், வீதியால் அவசரமாக நோயாளர்களை அழைத்துச் செல்லக் கூட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் கர்ப்பிணி தாய்மார்களும் மிகவும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி வருவதாகவும், குறித்த கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆகவே, அரசியல்வாதிகள் அரச அதிகாரிகள் இந்த மக்களின் நலன் கருதி, ஹொரவ்பொத்தான - கரடிக்குளம் பிரதான வீதியை புனரமைப்பு செய்வதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என, அப்பகுதியில் உள்ள மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எப். முபாரக்

## இலங்கையில் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்தல்: பாதுகாப்பான எதிர்காலம் ஒன்றுக்காக!

# நுகர்வோருக்கு அதிகாரமளித்தல்

உணவுப் பாதுகாப்பு என்பது தனிநபர் நலன் என்பதற்கு அப்பாற்பட்டதாகும். தேசம் ஒன்றின் ஒட்டுமொத்த நலன் மற்றும் பொருளாதார தேர்ச்சியில் அது மிகவும் முக்கியமான பங்கினை வகிக்கின்றது. உணவுத் துறையின் பெரும் ஆற்றலை ஏதுவாக்குவது மாத்திரமன்றி, இலங்கையர்கள் அனைவரதும் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை காக்கும் உணவுப் பாதுகாப்புக் கொள்கைகளின் நவீனமயமாக்கலை முன்னிலைப்படுத்தலில் இந்தக் கருத்தாக்கம் தங்கியுள்ளது.

### பாதுகாப்பற்றவை உணவு அல்ல

உலகளாவிய ரீதியில், மாசடைந்த உணவுகள் சுமார் 420,000 உயிரழப்புகளுக்கு காரணமாகியுள்ளன. பாதுகாப்பற்ற உணவு என்பது, பொருளாதார வளர்ச்சியையும் பாதிப்படையச் செய்து, குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில் 95 பில்லியன் அமெரிக்க டொலர் வரை வருடாந்த உற்பத்தித்திறன் இழப்புக்கு வழிகோலியுள்ளது.

இலங்கையில், மேம்படுத்தப்பட்ட உணவுப் பாதுகாப்பு கட்டமைப்பின் பயன்கள் தொடர்பில் UNIDO இனால் முன்னெடுக்கப்பட்ட அண்மைய கற்கையானது, 30 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடும், உணவுப் பாதுகாப்பு சவால் முகாமைத்துவ மேம்படுத்தல்களுக்கு வருடாந்தம் மொத்த வரவு-செலவுத் திட்ட உறுதிப்பாடான 9 மில்லியன் அமெரிக்க டொலரும் வருடாந்தம் ஆகக் குறைந்த 113 உயிர்களை காப்பாற்றுவதாகவும், வருடாந்த ஏற்றுமதி மதிப்பை குறிப்பிடத்தக்களவில் அதிகரிக்கும் எனவும், அதாவது தசாப்தம் ஒன்றில் 24 சதவீதம் வரை அதிகரிக்கும் எனவும் மதிப்பிட்டுள்ளது.

பொதுச் சுகாதார துறையில் 70 வருடங்களுக்கு மேற்பட்ட செழிப்பான வரலாற்றுடன், இலங்கையானது உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்வதில் குறிப்பிடத்தக்க தேர்ச்சியை எட்டியுள்ளது. எவ்வாறாயினும், காலங்கடந்த ஒழுங்குவிதிகள், போதியதல்லாத நிறுவன ஒருங்கிணைப்பு, மற்றும் விவசாய நிலம் முதல், உணவு பரிமாறும் மேசை வரை முழுமையான கண்காணித்தல் பயிற்சிகள் இன்மை என்பன நாட்டின் உணவுப் பாதுகாப்பு கட்டமைப்பிற்கான மறுசீரமைப்புக்கான பெரும் தேவையை ஏற்படுத்தியுள்ளன.

இந்த இடைவெளிகளை நிரப்புவதற்கு அவசியத்தை அறிந்துணர்ந்து, ஐக்கிய நாடுகள் தொழில்துறை அபிவிருத்தி நிறுவனம் (UNIDO) மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் (FAO) என்பன ஐரோப்பிய ஒன்றியத்தின் பரந்த மனப்பான்மையுடன் நிதியுதவி அளிக்கப்பட்ட BESPA-FOOD செயற்றிட்டத்தில் ஒன்றிணைந்துள்ளன.

ஒழுங்குவிதிகளை பின்பற்றல், தேசிய உணவுப் பாதுகாப்பு கொள்கையை மீளமைத்து உற்பத்தியாளர்கள், பதப்படுத்துவோர் மற்றும் உணவு தொழில் செயற்படுத்துனர்களின் ஆற்றலை பரவலாக்கல் மற்றும் நுகர்வோருக்கு முன்னுரிமையளிக்கும் விவசாய மற்றும் உணவுச் சங்கிலி முழுவதிலும் இணைப்பினை வளர்த்தல் மூலம் இலங்கையின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துவற்கு இந்த ஒருங்கிணைந்த திட்டம் இலக்கு வைத்துள்ளது.

### போதியளவு, பாதுகாப்பான மற்றும் நிலையான உணவுக்கான சமமான அணுகும் வசதியை உறுதி செய்தல் – ஐரோப்பிய ஒன்றியம்

உணவுப் பாதுகாப்பு என்பது அனைவரதும் பிரச்சினையாகும். எமது உலகமயமான உலகில், உணவுப் பாதுகாப்பு என்பது ஒரு நாட்டிற்குரிய பிரச்சினையல்ல. அதன்காரணமாக நாம் ஒன்றாக செயற்படல் வேண்டும்.

ஐரோப்பாவில், எமது சூழலையும், எமது பூமியையும் பாதுகாக்க வேண்டுமாயின், நிலையான, நியாயமான, ஆரோக்கியமான மற்றும் சுற்றாடலுக்கு நெருக்கமான உணவு முறைமைக்கு மாறுவது அவசியம். அனைவருக்கும் போதியளவிலான, பாதுகாப்பான மற்றும் நிலையான உணவு இருப்பதனை நாம் உறுதி செய்ய வேண்டும்.

பசுமையான விவசாயம் மற்றும் சிறந்த உணவுக்கான இலட்சிய இலக்குகளை நாம் நிர்ணயித்துள்ளோம். எடுத்துக்காட்டாக, 2050 அளவில், உலகில் முதலாவது காலநிலை நடுநிலையான கண்டமாக மாறுவதற்கு ஐரோப்பா விரும்புகின்றது. அத்துடன், 2030இல், இன்னும் 7 வருடங்களில், ஐரோப்பிய ஒன்றியத்தின் 25 சதவீதமான விவசாய நிலங்களை இயற்கை முறைக்கு மாற்றுவதற்கு நாம் விரும்புகின்றோம்.





இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான FAO பிரதிநிதி


கலாநிதி ரெனே வென் பேர்க்கல்
இலங்கை UNIDO பிரதிநிதி.


லாஸ் பிரெடால்
பதில் தூதுவர், இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு.

உலகில் ஆகக் கூடிய உணவுப் பாதுகாப்பு தரங்களை ஐரோப்பிய ஒன்றியம் கொண்டுள்ளது. பக்கச்சார்பற்ற விஞ்ஞான ஆலோசனையை வழங்குவதில் மற்றும் உணவுச் சங்கிலியுடன் சம்பந்தப்பட்ட ஆபத்துகள் தொடர்பில் தொடர்பாடல் செய்யும் கடமையை ஐரோப்பிய உணவுப் பாதுகாப்பு அதிகார சபை (EFSA) கொண்டுள்ளது. உயர்தரமான, பாதுகாப்பான நியமங்கள் மற்றும் மூலம் தொடர்பான தெளிவான விவரங்களுடன் ஊட்டச்சத்துள்ள உணவினை உத்தரவாதப்படுத்துவதற்கு அது வடிவமைக்கப்பட்டு உள்ளது. உணவானது நுகர்வோருக்கு பாதுகாப்பாக இருப்பதனை இவை அனைத்தும் உறுதிசெய்தல் வேண்டும்.

மேலும், ஐரோப்பிய ஒன்றிய விவசாய-உணவு சங்கிலி எவ்வளவு முக்கியமானது என்பதனையும், உலகெங்கிலும் உள்ள சமுதாயங்கள் பாதுகாப்பான உணவிற்கான நம்பகமான அணுகும் வசதியை கொண்டிருப்பதற்கு உணவு விநியோகச் சங்கிலியில் தடைகளை குறைப்பது எவ்வளவு அத்தியாவசியமானது என்பதையும் கொவிட்-19 பெருந்தொற்று மற்றும் உக்ரேன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பு என்பன வெளிக்காட்டியுள்ளன. பாதுகாப்பான உணவை வழங்கல் என்பது விவசாய நிலத்தில் இருந்து, உணவுண்ணும் மேசை வரையான உணவு விநியோகச் சங்கிலியில் உள்ள அனைத்து பங்காளர்களினதும் பொறுப்பாகும்.

இலங்கையில், விவசாயம் மற்றும் உணவுத் துறையில் நீண்டகால பங்காளராக ஐரோப்பிய ஒன்றியம் உள்ளது. இது எமது பிரதான முன்னுரிமைகளில் ஒன்றாகும். இதற்காக, நாட்டில் உற்பத்தித்திறன் மிக்க, சந்தைக்கு ஏற்ற மற்றும் நிலையான விவசாயம் மற்றும் உணவுத் துறையை முன்னிறுத்துவதற்கு உதவித்தொகைகளில் 100 மில்லியன் யூரோக்களுக்கும் அதிகளவினை (31 பில்லியன் ரூபாய்க்கு அதிகமாக) நாம் இதுவரை முதலீடு செய்துள்ளோம். இலங்கை உணவுப் பொருட்களின் போட்டித்திறன் மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கும் நாம் உதவுகின்றோம்.

தற்போது, BESPA-FOOD என்றழைக்கப்படும் செயற்றிட்டத்தின் கீழ் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரத்தினை முன்னிறுத்துவதற்கும், ஆதரவளிப்பதற்கும் நாம் UNIDO உடன் பணியாற்றுகின்றோம். இந்த 9.5 மில்லியன் யூரோக்கள் பெறுமதியான திட்டத்தில், அனைவருக்கும் பாதுகாப்பான உணவை வழங்குவதற்கு உணவு உற்பத்தியில் சிறந்த பயிற்சிகள் மற்றும் தரங்களை முன்னிறுத்துவதற்கு நாம் விரும்புகின்றோம்.

### உணவுப் பாதுகாப்பு மற்றும் தர கட்டமைப்பினை மாற்றுவதில் இலங்கையின் உணவுத் துறையின் வகிபாகத்தை அங்கீகரித்தல் - UNIDO

தரங்களுக்கு இசைவானதாக வெளிப்படும் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகளை வெளிப்படுத்தும் உற்பத்திகளை சந்தைகள் நன்கு எடுத்துக் கொள்கின்றன. பாதுகாப்பான, தரமான, சமூகப் பொறுப்புள்ள மற்றும் நிலைத்திருக்கும் தன்மையை உறுதி செய்வதில் தரங்கள் அடிப்படை வகிபாகத்தைக் கொண்டுள்ளன. நுகர்வோரின் பாதுகாப்பு தொடர்பில் பொறுப்பு இருக்கும் போது, புறச்சுகாதார மற்றும் தாவரங்களின் ஆரோக்கியம் தொடர்பான (SPS) செயற்பாடுகள் உள்ளடங்கலாக தொழில்நுட்ப ஒழுங்குவிதிகளை நோக்கியதாக தரங்கள் அமைகின்றன. இங்கே பொருந்திப் போதல் என்பது சட்டக் கடப்பாடாகின்றது.

சுகாதாரம், நியாயமான வர்த்தகம், சுற்றுச்சூழல் நிலைத்திருக்கும் தன்மை என்பன தொடர்பிலான சமூகம்சார் விழுமியங்களை பிரதிபலிக்கும் நியமங்களுக்கு இயல்பாகப் பொருந்திப் போதலுடன் 'நுகர்வோரியல்' என்பது படிப்படியாக பிணைக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக, சுயக்கட்டுப்பாட்டு முறையில் நியமங்கள் பிரயோகிக்கப்படுமாயின், உலகளாவிய ஒன்றித்துப் போதலை ஏற்றுமதி இயலுமையுடனான பெறுமதி சங்கலிகள் (VC) அதிகரிக்க முடியும். இறக்குமதி செய்யும் நாடுகளின் நுகர்வோர் முன்னுரிமைகள் இந்த விழுமியத்தை நோக்கி நகரும் போது, இயல்பான நியமங்களுக்கு இணங்குவதற்கான வர்த்தகச் சூழல் என்பது இலங்கையில் தெளிவாகின்றது.

இலங்கையில், சர்வதேச வர்த்தகத்திற்கான பொருத்தப்பாடு மற்றும் தரங்களை பாதிக்கும் சமூகப்பொருளாதார நிலைமைகளில் மோசமான விளைவுகளை குறைக்கும் வகையில் உணவுக் கட்டுப்பாட்டு முறைமைக்குள் எழும் தோல்விகள் திருத்தப்பட முடியும். உணவுப் பாதுகாப்பு நிலைமைகளை மேம்படுத்துவதில், மற்றும் HACCP போன்ற உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகள் (FSSM) சம்பந்தப்பட்ட அதிகரித்த செயற்படுத்தல் செலவுகளை தக்க வைத்தலில் விநியோகச் சங்கிலியுடன் உணவு தொழில் செயற்படுத்துனர்கள் (FBO) முதலீடு செய்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கற்கையில், இதனை நோக்கியதாக உணவுத் தொழில்துறையில் முதலீடு செய்வதற்கான தெளிவான பொருளாதார பகுத்தறிவினை UNIDO முன்வைக்கின்றது. பத்து வருட காலப்பகுதியில், 1.25 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உணவுத் தொழில்துறைக்கு அதிகரித்த முதலீடு மற்றும் செயற்படுத்தல் செலவுகள் மேலதிக 2.5 சதவீதத்தால் அதிகரிக்கும் என்பதுடன், குறித்த துறையில் 6 சதவீதமாகவுள்ள விவசாய மற்றும் உணவுத் தொழில்துறைகளின் 122,236 நபர்களின் வேலைவாய்ப்பினை காக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயன்களைப் பெறுவதற்கு, ஏற்றுமதி செய்யும் உணவுத் தொழில் செயற்படுத்துனர்கள் மற்றும் அவர்களின் விநியோகஸ்தர்கள், 3,823 அமைப்புகள், கருவி, ஊழியர் பயிற்சி மற்றும் வலுவாக்கப்பட்ட கட்டுப்பாட்டு முறைமைகளின் புதுப்பித்தலுக்கான மொத்தம் 822 மில்லியன் அமெரிக்க டொலர் உத்தேச முதலீட்டுடன் இணைக்கப்படல் வேண்டும். வருடம் ஒன்றுக்கு சராசரியாக 43 மில்லியன் அமெரிக்க டொலர் வருடாந்த செயற்படுத்தல் செலவையும் ஏற்றுமதி விநியோகச் சங்கிலிகளையும் செயற்படுத்துனர்கள் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கமைய, தேவையான நிதியிடலை பெற்றுக்கொள்வதற்கு கருவிகளின் அபிவிருத்திக்கும் அரசாங்கம் ஆதரவளிக்க வேண்டும்.

உணவுக் கட்டுப்பாட்டு நிர்வாகத்தின் பிரதான நிறுவனம்சார் மற்றும் சட்ட மறுசீரமைப்புகளின் சுயாதீனத்தன்மையுடன், உணவுக் கட்டுப்பாடுகளின் சுயக்கட்டுப்பாட்டு பிரயோகத்திற்கு வழிகோலும் பொதுவான பயிற்சிகளை உணவுத் தொழில்துறையானது கூட்டாக விளக்குவதும் மற்றும் பின்பற்றுவதும் மிகவும் முக்கியமாகும். சம்பந்தப்பட்ட திறன்மிக்க அதிகாரிகளின் ஒத்துழைப்புடன், நியமங்கள், வழிகாட்டிகள் மற்றும் தொழிநுட்ப விவரக்குறிப்புகள் என்ற வடிவத்தில் நெறிமுறைசார் ஆவணங்களை UNIDO அபிவிருத்தி செய்வதுடன், தெங்கு, வெனிலா, வாழை, மரவள்ளிக் கிழங்கு என்பவற்றை உள்ளடக்கிய BESPA-FOOD செயற்றிட்டம் தெரிவு செய்த பெறுமதி சங்கிலிகளுக்கான விவசாய-உணவுத் தொழில்துறைக்கு பயிற்சி மற்றும் பிரத்தியேகமான தொழில்நுட்ப உதவியை வழங்கி வருகின்றது.

தற்போதுள்ள நெறிமுறைசார் ஆவணங்களில் உள்ள இடைவெளிகயை நிரப்புவதற்கு அப்பால், நெறிமுறைசார் அபிவிருத்திச் செயற்பாடுகளில், குறிப்பாக சர்வதேச நியமப்படுத்தல் மன்றில் இலங்கையின் வினைத்திறன் மிக்க பிரதிநிதித்துவத்திற்கான நியமப்படுத்தலில் ஈடுபடுத்துவதற்கு உணவுத் தொழில்துறைக்கு UNIDO அதிகாரமளிக்கின்றது. மேலும், நியமங்களின் சுயக்கட்டுப்பாட்டு பிரயோகத்தை முதன்மைப்படுத்துவதற்கு, FSMS நியமங்கள், தர முகாமைத்துவ முறைமை (QMS) நியமங்கள், ஏனைய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர கருத்தாக்கங்களை பிரயோகிப்பதில் உணவுத் தொழில் செயற்படுத்துனர்களை இயலுமைப்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப உதவியை UNIDO வழங்குகின்றது.

அத்தகைய தரங்களுடன் பொருத்தப்பாட்டினை வெளிப்படுத்தும் FBO ஏதுவாக்கும் உள்ளக ரீதியில் அணுகக் கூடிய, சர்வதேச ரீதியில் அங்கிகரிக்கப்பட்ட இணக்க மதிப்பீடு சேவைகளுக்கான அணுகல் வசதியை அதிகரிப்பதற்கு, பரிசோதித்தல், அளவுத்திருத்தம், மேற்பார்வை, உற்பத்தி முறைமைகள் சான்றளித்தல், சரிபார்த்தல், பெறுமதி சேர்த்தலில் புதிய மற்றும் பரவலாக்கப்பட்ட சேவைகளின் சான்றளித்தலை நோக்கி தேசிய தர உட்கட்டமைப்பு (NQI) நிறுவனங்கள் மற்றும் 28 இணக்க மதிப்பீட்டு அங்கங்களினை (CAB) UNIDO இயலுமைப்படுத்துகின்றது

அத்தகைய செயற்றிட்ட இடையீடுகளின் ஊடாக உணவு தொழில்துறையுடன் இணைந்து, தமது வகிபாகம், உரிமைத்துவம், உணவுப் பாதுகாப்பு, தரச் சூழலை மாற்றுவதில் தாக்கம் என்பவற்றை முழுமையாக அங்கிகரித்த உணவுத் தொழிற்றுறை ஒன்றை காண்பதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.

### உணவுப் பாதுகாப்பு கொள்கை மறுசீரமைப்புகள் மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வின் முக்கியத்துவம் – FAO

தற்போது, இலங்கையில் உணவுப் பாதுகாப்பினை நிர்வகிக்கும் நியமங்கள் 1980ஆம் ஆண்டு உணவுச் சட்டம் மற்றும் இலங்கையின் நியமங்கள் நிறுவனம் ஆகிய இரண்டு பிரதான புள்ளிகளில் இருந்து வருகின்றன. பதப்படுத்தல், தயாரித்தல் மற்றும் சில்லறை விற்பனை சம்பந்தப்பட்ட தர மற்றும் பாதுகாப்பு அளவுருக்களை தற்போதுள்ள சட்டங்கள் அடையாளப்படுத்துகின்றன. நுண்ணுயிர் தரநிலைகள் போன்ற குறிப்பிட்ட அளவுருக்கள் அடையாளப்படுத்தப்படவில்லை என்பதுடன், அணுகுமுறை என்பது ஒட்டுமொத்த விநியோகச் சங்கிலியை இலக்கு வைக்கவில்லை. உற்பத்தியாளர்கள், சேமிப்பகம், போக்குவரத்து செய்வோர், செயற்படுத்துனர்கள், வர்த்தகர்கள், சில்லறை வியாபாரிகள் கடுமையான பாதுகாப்பு செயலேற்பாடுகளை பின்பற்றுவதனை உறுதி செய்து ஒட்டுமொத்த உணவு மதிப்புச் சங்கிலியை ஒழுங்குவிதிகள் உள்ளடக்க வேண்டும்.

உணவுப் பாதுகாப்பு கொள்கையை வினைத்திறன் மிக்க வகையில் வலுப்படுத்துவதற்கு, கரிசனை மிக்க பல்வேறு பிரதான பகுதிகளை இலங்கை அடையாளப்படுத்தல் வேண்டும். கட்டுப்பாட்டு வரைபுநகல்கள் மற்றும் நிறுவனங்களை வலுப்படுத்தல், விநியோகச் சங்கிலி கண்டுபிடிக்கக் கூடிய தன்மையை பரவலாக்கல், உணவு உற்பத்தியின் அனைத்து படிநிலைகளிலும் சுகாதார பயிற்சிகளை மேம்படுத்தல், மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வை அதிகரித்தல் என்பன இந்தச் செயற்பாட்டில் மிக முக்கியமான படிநிலைகளாகும். BESPA-FOOD ஊடாக FAOஆனது சுகாதார அமைச்சு மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் பணியாற்றும். மேலதிகமாக, உட்கட்டமைப்பு, இயலுமை கட்டியெழுப்பல், மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களில் முதலீடுகள் வினைத்திறன் மிக்க கண்காணித்தலையும், உணவுப் பாதுகாப்புத் தரங்களின் அமலாக்கலையும் ஏதுவாக்கும்.

உணவுப் பாதுகாப்பு தொடர்பில் அனைத்து அரசாங்க நிறுவனங்களுக்கும் இடையிலான மற்றும் புறப் பங்குதாரர்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு என்பது கொள்கை நடைமுறைப்படுத்தலின் வெற்றிக்கு மிகவும் முக்கியமானதாகும். இது தொடர்பில், தற்போதுள்ள உணவு ஆலோசனைக் குழுவானது குறிப்பிடத்தக்க தேர்ச்சியை அடைந்துள்ளது. நீடித்த மாற்றத்தை எட்டுவதற்கு, முறைசார் பொறியமைப்புகளின் ஊடாக ஒருங்கிணைப்புகள் வினைத்திறன் மிக்கதாக அமைதல் வேண்டும். அரசாங்கம், உணவுசார் அதிகாரிகள், தனியார் துறை மற்றும் சிவில் சமூக அமைப்புகள் உணவுப் பாதுகாப்பு நெறிமுறைகளைப் பிரயோகிப்பதன் பயன்களைப் பெறுவதற்கு ஒன்றுடன், ஒன்று இணைந்து பணியாற்ற வேண்டும்.

மேம்படுத்தப்பட்ட உணவுப் பாதுகாப்பு கொள்கையின் பயன்கள் பரந்தளவிலானவை. விவசாய மற்றும் உணவுத் தொழில்துறைகளில் அதிகரித்த வெளிநாட்டு முதலீட்டினை இலங்கை ஈர்க்க முடியும். தமது ஏற்றுமதி சந்தை பங்கினை பரவலாக்க முடியும் என்பதுடன் தமது உணவு வகைகளின் பாதுகாப்பு மற்றும் தரத்தை வருகை தருபவர்களுக்கு உறுதி செய்வதன் மூலம் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க முடியும். மேலும், உறுதியான பாதுகாப்பு ஆளுகை என்பது உணவு இழப்பு மற்றும் கழிவைக் குறைத்து, உணவுப் பாதுகாப்புக்கு பங்களித்து, வளங்கள் மீதான கறையை குறைக்கும்.

எவ்வாறாயினும், பொதுமக்களின் செயற்றிறன் மிக்க பங்கேற்பு மற்றும் விழிப்புணர்வில் உண்மையான வெற்றி தங்கியிருக்கின்றது. நுகர்வோர் விழிப்புணர்வு மற்றும் கல்வி என்பவற்றை துரித உணவுப் பாதுகாப்பு கொள்கை ஒன்றிற்கான அடிப்படைத் தூண்களாக BESPA-FOOD ஊடாக FAOஆனது அங்கிகரிக்கின்றது. தாம் உட்கொள்ளும் உணவு குறித்த தகவலறிந்த தெரிவுகளை எடுப்பதற்குத் தேவையான அறிவு மற்றும் கருவிகளுடன் இலங்கை நுகர்வோர் அதிகாரமளிக்கப்படல் வேண்டும். தரச் சான்றிதழ்கள், பெயர் பட்டியல்கள், சுகாதார நியமங்களின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ளலும் இதில் உள்ளடங்கும்.

தனிப்பட்ட குடும்பங்களுக்கு அப்பால் நுகர்வோர் கல்வி பரவலாக்கப்படல் வேண்டும் என FAO நம்புகின்றது. உணவுப் பாதுகாப்பு விழிப்புணர்வை முன்னிறுத்துவதில் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், சமுதாய நிறுவனங்கள் முக்கியமான பங்கினை ஆற்றுகின்றன. பாடசாலை பாடவிதானத்திற்குள் உணவுப் பாதுகாப்புக் கல்வியை உள்ளடக்குவது என்பது, வாழ்நாள் பழக்க வழக்கங்களை ஏற்படுத்துவதுடன், தமது ஆரோக்கியம் மற்றும் நலனை காப்பதற்கு தகவலறிந்த தீர்மானங்களை எடுக்கக் கூடிய தகவலறிந்த நுகர்வோர் தலைமுறையினை உருவாக்கும்.

எமது உணவானது ஆபத்துகளின்றி இருத்தல், ஆரோக்கியமான சனத்தொகையை முன்னிறுத்தல், அதிகரித்த நுகர்வோர் நம்பிக்கை, சந்தை சந்தர்ப்பங்களின் ஊடாக பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல் என்பவற்றை வலுவான உணவு பாதுகாப்பு முறைமை என்பது உறுதி செய்யும்.

பாதுகாப்பான மற்றும் நெகிழ்வான உணவுத் தொழில்துறையை நோக்கிய இலங்கையின் பயணம் என்பது, சந்தேகத்திற்கிடமற்ற வகையில் சவால் மிக்கதாகும். ஆனாலும், அதன் வெகுமதிகள் அளவிட முடியாதவையாகும்.

ஒன்றாகப் பணியாற்றுவதன் மூலம், உணவு என்பது ஒரு சலுகையாக அன்றி, இலங்கையர்கள் அனைவருக்குமான உரிமையானதாக அமையும் பாதுகாப்பான மற்றும் ஊட்டச்சத்து மிக்க உணவுடனான எதிர்காலத்தை நாம் கட்டியெழுப்ப முடியும்.

கீவ்

# உக்ரேனில் முக்கிய அணை தகர்ப்பு

## மக்கள் வெளியேற்றம்: ரஷ்ய படைகள் மீது குற்றச்சாட்டு

ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ள உக்ரேன் பகுதியில் இருந்த முக்கிய அணையின் ஒரு பகுதியை, ரஷ்ய படைகள் குண்டு வீசி தகர்த்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அணையிலிருந்து அதிக அளவில் தண்ணீர் வெளியேறுவதால் உக்ரேனில் உள்ள 10 கிராம மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



உக்ரேனின் கெர்சன் பகுதியில் டினிப்ரோ ஆற்றின் குறுக்கே, 1956ஆம் ஆண்டு 98 அடி உயரத்தில், 3.2 கிலோ மீற்றர் நீளத்தில் கக்கோவ்கா அணை கட்டப்பட்டது. இங்கு கக்கோவ்கா நீர்மின் நிலையமும் உள்ளது. கிரிமியன் தீபகற்ப பகுதி, ஜபோரிச்ஜியா அணுமின் நிலையம் ஆகியவற்றுக்கு இந்த அணையிலிருந்துதான் தண்ணீர் விநியோகம் நடைபெறுகிறது.


சோவியத் ஒன்றிய காலத்தில் கட்டப்பட்ட இந்த அணையை, ரஷ்ய இராணுவம் தகர்த்துவிட்டதாகவும், இங்கிருந்து வெளியேறும் தண்ணீர் 5 மணி நேரத்துக்குள் அபாய அளவை எட்டும் என கெர்சன் பகுதி இராணுவ நிர்வாகத் தலைவர் அலெக்சாண்டர் புரோகுதின் கூறியுள்ளார்.

இதனால் தெற்கு உக்ரேனின் கக்கோவ்கா பகுதியில் உள்ள 10 கிராம மக்களை வெளியேற்றும் நடவடிக்கை தொடங்கியுள்ளதாக கெர்சன் ஆளுநர் தெரிவித்துள்ளார். மக்கள் தங்களின் முக்கிய ஆவணங்கள் மற்றும் செல்ல பிராணிகளுடன் வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ரஷ்யா

# மதுவால் 16 பேர் மாண்டனர்

ரஷ்யாவின் மேற்குப் பகுதியில் உள்ள Ulyanovsk நகரில் மதுபானம் அருந்திய 16 பேர் மரணமடைந்தனர்; 35 பேர் நோய்வாய்ப்பட்டனர். அவர்களில் 19 பேர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என நகரின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.



அவர்கள் அருந்திய மதுபானத்தில் மெத்தனால் நச்சுப்பொருள் கலக்கப்பட்டிருந்தது என்று ரஷ்ய ஊடகங்கள் தெரிவித்தன. இத்தகைய சம்பவங்கள் ரஷ்யாவில் வழக்கமானவை என தெரியவந்துள்ளது.


புதுடெல்லி

# கண்ணாமூச்சியில் இருவருக்கும் துயரம்

புதுடெல்லியின் ஜாமியா நகர் பகுதியில் வசித்துவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்த 8 வயதான சிறுவன் மற்றும் 6 வயதான சிறுமி ஆகியோர், செவ்வாய்க்கிழமை (06) மதிய உணவுக்கு பின்னர் காணாமல் போனார்கள்.

விளையாடச் சென்ற அண்ணனும் தங்கையும் இரவாகியும் வீடு திரும்பாதது கண்டு பெற்றோர் அதிர்ச்சி அடைந்தனர்.

கோடை விடுமுறையை முன்னிட்டு அப்பகுதியில் உள்ள குழந்தைகள் அனைவரும் கண்ணாமூச்சி ஆட்டம் விளையாடியதாக தெரிவித்தனர். இதன் அடிப்படையில் குழந்தைகள் ஓடி ஒளிய வாய்ப்புள்ள இடங்கள் பலவற்றை, பகுதி மக்கள் திரளாக இரவு நெடுகத் தேடினர்.



எங்கு தேடியும் குழந்தைகள் கிடைக்காது போகவே, 'கடத்தப்பட்டிருக்கலாமோ' என்ற ஐயத்தில் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

கடைசியாக அவர்களுடைய வீட்டில் ஒரு மரப்பெட்டியை சோதனையிட்டபோது அதிர்ச்சி அடைந்தனர்.

அளவில் பெரிய அந்த மரப்பெட்டியில் இருவரும் சடலங்களாக மீட்கப்பட்டனர். இருவரும் மூச்சுத்திணறி இறந்ததாக பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க

# விற்பனை விளம்பரத்தால் பரபரப்பு

உயர்நிலைப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் சிலர் ரியல் எஸ்டேட் இணையதளத்தில் பாடசாலையை விற்கும் விதமாக விளம்பரம் செய்துள்ளமை அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் மேரிலாந்தில் உள்ள மீட் உயர்நிலைப் பாடசாலை மாணவர்கள், ஜில்லோ என்ற ரியல் எஸ்டேட் இணையதளத்தில் விளம்பரம் செய்து பாடசாலையை விற்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். மேரிலாந்தில் உள்ள மீட் உயர்நிலைப் பாடசாலை மாணவர்கள் தங்கள் பாடசாலையின் புகைப்படங்களைப் பகிர்ந்துகொண்டு, "நல்ல, ஆனால் பாதி வேலை செய்யும் சிறை" என்று கேலியாகத் தலைப்பிட்டனர்.




மேலும், பாடசாலையில் உள்ள 15 குளியலறைகளில் வடிகால் பிரச்சினை இருப்பதாக விளம்பரத்தில் கூறப்பட்டுள்ளது.

இங்கு, ஒரு நல்ல சமையலறை மற்றும் ஒரு சாப்பாட்டு அறை உள்ளது. ஒரு தனியார் கூடைப்பந்து மைதானத்தில், "எலிகள், அணிகள் மற்றும் பிழைகள், அவை உங்களை சத்தமிட வைக்கும்" என்று விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜப்பான்

# சிரிக்க கற்றுக்கொடுக்கும் வகுப்பு

உலகில் கொரோனா தொற்று உச்சக் கட்டத்தை எட்டி இலட்சக்கணக்கானோர் பலியான நிலையில், மக்கள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

இதன் தாக்கத்தால் ஜப்பானியர்கள் சிரிக்கவே மறந்துவிட்டார்கள். கொரோனா பரவாமல் இருக்க கடைப்பிடித்த முக கவசம் அணியும் பழக்கமும் அதற்கு ஒரு காரணம் என்று ஆராய்ச்சியில் கூறப்படுகிறது.



தொடர்ச்சியாக முக கவசம் அணிந்து, அவர்கள் சிரிக்கவே மறந்துவிட்டார்களாம். ஜப்பானிய அரசு கொரோனா தொற்று கட்டுப்பாடில் இருந்து முகக் கவசம் அணிவதற்கு கட்டாயம் இல்லை என்ற போதும், இன்றும் பலர் முகக் கவசம் அணிந்து தான் வெளியே செல்கிறார்கள்.

இந்நிலையில், டோக்கியோவில் உள்ள கலை கல்வி நிறுவனம், சிரிக்க மறந்த ஜப்பானிய மக்களுக்கு சிரிக்க கற்றுக்கொடுக்கும் வகுப்புகளை எடுத்து வருகிறது.

சீர்காழி

# "பாயசம் சரியில்லை" சாம்பாரை கொட்டி அடிதடி

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தெற்கு ரத வீதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற திருமண நிச்சயதார்த்த விழாவில், மணமகன் வீட்டார் மற்றும் பெண் வீட்டார் இருவரும் மண்டபத்தில் வாசலில் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



இது தொடர்பாக தகவல் அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்று இரு தரப்பையும் சமாதானம் செய்த பொலிஸார் விசாரணை செய்தனர்.

அப்பொழுது பாயாசம் சரியில்லாததால் அதனைப் பெண் வீட்டார் தட்டி கேட்டு, தகாத வார்த்தையால் திட்டியதாகக் கூறப்படுகிறது. இதனால் மாப்பிள்ளை வீட்டார் தரப்பில் ஆத்திரமடைந்து சாம்பாரைப் பெண் வீட்டார் மீது ஊற்றியதாக கூறப்படுகிறது. இதனால் இருதரப்பினரும் கைகலப்பாகி மோதல் ஏற்பட்டுள்ளது.




ஆப்கானிஸ்தானுக்கு எதிரான

# தொடரைக் கைப்பற்றிய இலங்கை

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை இலங்கை கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஆப்கானிஸ்தானும், இரண்டாவது போட்டியை இலங்கையும் வென்றிருந்த நிலையில், ஹம்பாந்தோட்டையில் நேற்று நடைபெற்ற தீர்மானமிக்க மூன்றாவது போட்டியை வென்றமையைத் தொடர்ந்தே 2-1 என தொடரை இலங்கை கைப்பற்றியது.

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Sri Lanka Cricket
Dialog

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தானின் அணித்தலைவர் ஹஷ்மதுல்லாஹ் ஷாகிடி, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான், லஹிரு குமார (2), துஷ்மந்த சமீர (4), வனிடு ஹஸரங்க (3), மகேஷ் தீக்ஷனவிடம் வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 22.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 116 ஓட்டங்களையே பெற்றது.

பதிலுக்கு 117 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, பதும் நிஸங்கவின் 51 (34), திமுத் கருணாரட்ணவின் 56 (45) ஓட்டங்களோடு 16 ஓவர்களில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் சமீர தெரிவானார்.

# அல்-இத்திஹாட்டில் இணைய இணங்கிய பென்ஸீமா



சவுதி அரேபியக் கழகமான அல்-இத்திஹாட்டுடன் மூன்றாண்டு ஒப்பந்தமொன்றுக்கு ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட்டின் முன்களவீரரான கரிம் பென்ஸீமா இணங்கியுள்ளார்.

அல்தாரிக்கேயன்ஸ் மெகா ப்ளாஸ்ட் வெற்றிக் கிண்ணத் தொடர்:

# சம்பியனான 2008ஆம் ஆண்டு அணி

■ எப். முபாரக்






திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட அல் தாரீக் தேசிய பாடசாலையின் 55 வருட நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பாடசாலை பழைய மாணவர்களுக்கிடையிலான இரண்டாவது மாபெரும் "அல்தாரிக்கேயன்ஸ் மெகா ப்ளாஸ்ட் கிரிக்கெட் தொடரில் 2008ஆம் ஆண்டு அணி சம்பியனானது.

இக்கல்லூரியில் கல்வி கற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய 24 அணிகள், எட்டு ஓவர்களைக் கொண்ட விலகல் அடிப்படையிலான இத்தொடரில் பங்கேற்றிருந்த நிலையில், பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் 2015ஆம் ஆண்டு அணியை வென்று 2008ஆம் ஆண்டு அணி சம்பியனானது.

# டொட்டென்ஹாம் செல்லும் மக்குவாயா?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் பின்களவீரரான ஹரி மக்குவாயாவைக் கைச்சாத்திடுவதில் இன்னொரு பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஆர்வம் காட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் மக்குவாயாவின் சக இங்கிலாந்து வீரரான ஹரி கேன் கழகத்தில் தொடருவாரென டொட்டென்ஹாம் எதிர்பார்க்கின்றது.

# பயிற்சியாளரை நீக்கிய பரிஸ் ஸா ஜெர்மைன்?



பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் பயிற்சியாளர் கிறிஸ்டோபி கல்டியரை அக்கழகம் பதவி நீக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பரிஸ் ஸா ஜெர்மைன் லீக் 1 சம்பியனானபோதும், ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக்கில் இறுதி 16 அணிகளுக்கான சுற்றுடன் வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 08 ஜூன் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.